பக்கங்கள்:-23

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | மார்கழி 10 | செவ்வாய்க்கிழமை | 26.12.2023 | அதிர்வு 147

## பொலிஸ் கான்ஸ்டபிள் கடலில் மூழ்கி மரணம்!

கடற்கரையில் தனது நண்பர்கள் குழுவுடன் நீராடச் சென்ற பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

களுத்துறை, நாகொட பிரதேசத்தில் வசித்து வந்த 22 வயதான 06▶

# அமெரிக்காவில் இருந்து பஸில் வியூகம் வகுப்பு நாடு திரும்பியதும் மொட்டுக்குள் அதிரடி மாற்றம்

அமெரிக்கா சென்றுள்ள பஸில் ராஜபக்ஷ நாடு திரும்பிய பின்னர், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தொகுதி அமைப்பாளர்களுடன் விசேட சந்திப்பை நடத்தவுள்ளார்.

2024 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள தேர்தல்களை மையப்படுத்தியதாகவே இந்தச் சந்திப்பு நடைபெறவுள்ளது.

தேர்தல்களை எதிர்கொள்ளத் தயாராகுமாறு தொகுதி அமைப்பாளர்களுக்கு இதன்போது பஸில் ராஜபக்ஷ ஆலோசனை வழங்கப்படவுள்ளது.

அத்துடன், தொகுதி அமைப்பாளர் பதவியில் இருந்து சிலர் நீக்கப்பட்டு அவர்களுக்குப் பதிலாக புதியவர்கள் நியமிக்கப்படவுள்ளனர் என்றும் பொதுஜன பெரமுன கட்சி வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது. 07▶





# சம்பந்தன் - சுமந்திரன் விரும்பும் தீர்வை வழங்கவே முடியாதாம்!

## இப்படிச் சொல்கின்றது ராஜபக்ஷ கட்சி

(சுடர் திலீபன்)

**"இந்தியா, அமெரிக்கா, பிரிட்டன், கனடா உள்ளிட்ட சர்வதேச நாடுகளின் நிகழ்ச்சி நிரலுக்கமையச் செயற்படும் சம்பந்தன், சுமந்திரன் ஆகியோர் விரும்பும் அரசியல் தீர்வை வழங்க ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஒருபோதும் இணங்கவே மாட்டாது."**

**- இவ்வாறு மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் எம்.பி. தெரிவித்தார்.** 07▶



## சுனாமியில் உயிரிழந்தவர்களுக்காக இரண்டு நிமிடங்கள் மௌன அஞ்சலி



நாட்டில் அனைத்து மக்களும் இன்று காலை 9.25 மணி முதல் 9.27 மணி வரை இரண்டு நிமிடங்கள் மௌன அஞ்சலி செலுத்த வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் இதனைத் 06▶



பதில் பொலிஸ்மா அதிபர் பதவியில் தேசபந்து தென்னகோன் ஏன் தொடரக்கூடாது என்பதை காரணங்களுடன் வரிசைப்படுத்தி விவரமான அறிக்கையொன்று வெளியாகி இருக்கின்றது.

அதில் உள்ள முக்கிய விடயங்களின் சுருக்கம் வருமாறு:-

+ பொலிஸ் அதிகாரியாக சித்திரவதை குற்றங்களை இழைத்தவர் என உயர்நீதி மன்றத்தினாலேயே 06▶

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally

# மருந்து இறக்குமதி, விநியோகத்தில் முன்னேற்ற நிலை காணப்படுகிறது!

## சுகாதார அமைச்சின் செயலாளர் தகவல்



"மருந்துகளின் இறக்குமதி மற்றும் விநியோகத்தில் முன்னேற்றம் காணப்படுகிறது."

– இவ்வாறு சுகாதார அமைச்சின் செயலாளர் வைத்தியர் பாலித மஹிபால தெரிவித்துள்ளார்.

விசேட அறிக்கையொன்றை வெளியிட்டு அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அந்த அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:–

"கடந்த இரண்டு வாரங்களில் மருந்து இறக்குமதி மற்றும் விநியோகம் தொடர்பில் சில முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. கடந்த காலங்களில் மக்களின் சிகிச்சைகளுக்கு அத்தியாவசியமான மருந்துகளை விநியோகிப்பதில் பல பிரச்சனைகள் மற்றும் தடைகள் காணப்பட்டன.

எவ்வாறிருப்பினும் கடந்த இரண்டு வாரங்களில், நாட்டிலுள்ள பல்வேறு வைத்தியசாலைகளின் நிலைவரங்களை ஆராய்ந்த போது அவற்றுக்கு கிடைக்கப் பெற்ற மருந்துகளின் அளவு போன்றவற்றில் முன்னேற்றம் காணப்பட்டது.

மருந்துகளின் விநியோகம் குறித்து ஆழமான கணக்கெடுப்பு நடத்தப்பட்டு வருகிறது. அதற்கமையவே இந்த முன்னேற்றம் அடையாளங் காணப்பட்டுள்ளது.

எனினும் குறிப்பிட்ட சில மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது. அந்த மருந்துகளை கொள்வனவு செய்வதற்கு சுகாதார அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது." என்று தெரிவித்துள்ளார்.

# தொலைபேசிகளின் விலை 18 வீதத்தால் அதிகரிக்கும்!

## இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவிப்பு

தொலைபேசிகளின் விலை அடுத்த மாதத்தில் இருந்து 18 சதவீதத்தால் அதிகரிக்கும் என தொலைபேசி இறக்குமதியாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

வற் எனப்படும் பெறுமதி சேர் வரி விதிக்கப்படுவது இதற்கு பிரதான காரணமாகும் என அந்த சங்கத்தின் தலைவர் சமித் செனரத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தொலைபேசி இறக்குமதியாளர்கள், விற்பனையாளர்கள் மற்றும் சர்வதேச தொலைபேசி நிறுவனங்களுடன் தொடர்புகளை வைத்திருப்பவர்களுடன், இலங்கை தொலைத் தொடர்புகள் ஆணைக்குழுவின் அதிகாரிகள் பல கலந்துரையாடல்களை நடத்தி வருகின்றனர்.

இந்தநிலையில், சட்டவிரோத தொலைபேசி இறக்குமதி காரணமாக 3.1 பில்லியன் ரூபா வரி வருமானம் தற்போது இழக்கப்பட்டுள்ளது.

இந்தத் தொகை எதிர்காலத்தில் 11.9 பில்லியன் ரூபாவாக அதிகரிக்கும் என இந்தக் கலந்துரையாடல்களில் தெரியவந்துள்ளது.

தொலைத் தொடர்புகள் ஒழுங்குப்படுத்தல் ஆணைக்



குழுவில் பதிவு செய்யப்படாமல் சந்தையில் உள்ள தொலைபேசிகள் தொடர்பில் இந்த கலந்துரையாடல்களில் ஆராயப்பட்டுள்ளன.

இந்தநிலைமையை, கருத்திற் கொண்டு குறைந்த விலைகளில் தொலைபேசிகளை கொள்வனவு செய்வதற்காக நுகர்வோர்கள் போலி சந்தைகளை நாடுவார்கள் என கையடக்க தொலைபேசிகளை இறக்குமதி செய்வோர் மற்றும் விற்பனை செய்வோர் அரசாங்கத்திற்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

# அஸ்வெசும நலன்புரிக் கொடுப்பனவுக்கு ஜனவரியில் மீண்டும் விண்ணப்பம் கோரல்

அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவுகளுக்கான விண்ணப்பங்களை எதிர்வரும் ஜனவரி மாதம் மீண்டும் கோருவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

கேகாலையில் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"கடந்த முறை உரியவாறு விண்ணப்பங்களை அனுப்ப முடியாத தரப்பினர் தொடர்பில் கவனம் செலுத்தி ஜனாதிபதி விடுத்துள்ள உத்தரவுக்கமைய மீண்டும் விண்ணப்பங்களை கோருவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தற்போது இதன் முதற்கட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளோம். அப்போது நாம் எதிர்கொண்ட நடைமுறைச் சிக்கல்களை அறிந்து கொண்டிருக்கின்றோம்.

அனுபவம் வாய்ந்த அரச அதிகாரிகள் எவ்வாறு பொருத்தமானவர்களைத் தேடுவது, எமது அளவுகோல்களில் உள்ள நடைமுறைச் சிக்கல்கள் – இவை அனைத்தையும் வைத்து ஜனவரியில் மீண்டும் விண்ணப்பங்களைக் கோர ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

தற்போது 20 லட்சம் குடும்பங்கள் அஸ்வெசுமநலன்புரிதிட்டத்தில்உள்வாங்கப்பட்டுள்ளன. தேவையேற்படின்நாடாளுமன்றத்துக்கு அறிவித்து இதனை மேலும் 4 லட்சத்தால் அதிகரிக்குமாறும் ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார்."

– என்றார்.

# ஊழல்வாதிகளை பாதுகாக்கும் அரசாங்கத்திடமிருந்து நாடு விடுதலை பெறும் காலம் வெகு தொலைவிலேயே

## பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை கவலை

“உயர் நீதிமன்றத்தின் ஆணையை துளியளவும் கவனத்தில் கொள்ளாத போக்கே இன்று எம்நாட்டில் காணப்படுகிறது. ஊழல்வாதிகளை பாதுகாக்கும் அரசாங்கமே எமக்கு கிடைக்கப் பெற்றுள்ளதால், இந்நாடு அதிலிருந்து விடுதலை பெறும் காலம் வெகு தொலைவில் உள்ளது.“

– இவ்வாறு பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.

நத்தார் பண்டிகையை முன்னிட்டு பிரதான நள்ளிரவு ஆராதனை கட்டான – ஹல்பே புனித பிரான்ஸிஸ் சேவியர் தேவாலயத்தில் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தலைமையில் இடம்பெற்றது. இதன்போது ஆற்றிய உரையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் –

“இலங்கையில் ஒருவேளை உணவைக்கூட சரியாகப் பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் 8 மில்லியன் மக்கள் காணப்படுகின்றனர் என சில மாதங்களுக்கு முன்னர் தெரிய வந்தது. அந்த எண்ணிக்கை தற்போது இருமடங்காகியிருக்கக் கூடும். எதிர்கால கனவுகள் அனைத்தும் சிதைந்து போன நிலையிலேயே நாட்டிலுள்ள பலரும் இன்று வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

இவற்றுக்கு மத்தியில் வரிச் சுமைய அதிகரித்து, பொருள்களின் விலைகளும் அதிகரித்து, தொழில்களை இழந்து, பிள்ளைகளின் பசியைப் போக்க முடியாத பலரும் இன்று இந்த நாட்டில் உள்ளனர்.

இவ்வாறான நிலையிலும் உலகில் ஊழல், மோசடிகள் அதிகம் காணப்படும் நாடுகள் பட்டியலில் இலங்கை உயர்ந்த இடத்தில் காணப்படுகின்றமை உண்மையில் கவலைக் குரியதாகும்.



ஊழல்வாதிகளை பாதுகாக்கும் அரசாங்கமே எமக்கு கிடைக்கப் பெற்றுள்ளதால், இந்நாடு அதிலிருந்து விடுதலை பெறும் காலம் வெகு தொலைவில் உள்ளது.

உயர் நீதிமன்றத்தின் ஆணையை துளியளவும் கூட கவனத்தில் கொள்ளாத, நீதியும் நியாயமும் அற்ற நிலைமைக்கு நாடு தள்ளப்பட்டுள்ளது. அதிகார மோகத்திலுள்ளவர்களாலேயே நாடு ஆட்சி செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறது.

இவ்வாறானவர்களால் இம்முறை நத்தார் பண்டிகையில் வறுமையிலுள்ளவர்களுக்கு கை கொடுப்பதற்கானதாக அமைந்துள்ளதை நாம் அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

எனவே இல்லாதோருக்கும் வறியவருக்கும் தம்மால் இயன்ற உதவிகளை வழங்குமாறு சகல கத்தோலிக்க மற்றும் கத்தோலிக்கமல்லாத மக்களிடமும் கேட்டுக் கொள்கின்றோம்.”– என்றார்.

# கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு மாரவிலவில் ஒருவர் கொலை!

## சந்தேக நபரைத் தேடும் பொலிஸார்

(ரஸீன் ரஸ்மின்)

மாரவில – கொடால்கொடவத்த பிரதேசத்தில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு நபர் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

34 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த நபர் வேறு ஒருவரிடம் அடகு வைக்கப்பட்டிருந்த ரி.வி. மற்றும் கைத்தொலைபேசியை மீட்கச் சென்றுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் போது இருவருக்கிடையில் அங்கு ஏற்பட்ட வாக்குவாதம் கொலையில் முடிவடைந்துள்ளது என்று மாரவில பொலிஸார் தெரிவித்தனர்.

இதுபற்றி பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில் சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்தனர்.

அத்துடன், பொலிஸ் தடயவியல் பிரிவினரும், கைரேகை பரிசோதனை பிரிவினரும் சம்பவ இடத்தில் விசாரணைகளை முன்னெடுத்தனர்.



இந்தக் கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபர் இதுவரை கைது செய்யப்படவில்லை.

சந்தேகநபரை கைது செய்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வரும், மாரவில பொலிஸார் இதுதொடர்பான மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.



## சர்ச்சைக்குரிய மருந்து கொள்வனவு:

# கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் சோதனைக்கு அனுப்பிவைப்பு!

சர்ச்சைக்குரிய மருந்துக் கொள்வனவு தொடர்பில் குற்றப் புலனாய்வு திணைக்களத்தினால் கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் அரச இரசாயனப் பகுப்பாய்வாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.


இந்த ஆவணங்களில் காணப்படும் கையொப்பங்களைப் பரிசோதிப்பதற்காக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளதாக குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் சமன் ரத்நாயக்கவின் அலுவலகத்தில் கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் உள்ளிட்ட மேலும் சில ஆவணங்கள் அரச இரசாயனப் பகுப்பாய்வாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என அந்த அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் சமன் ரத்நாயக்கவிடம் குற்றப்புலனாய்வு திணைக்களத்தினர் கடந்த 20 ஆம் திகதி விசாரணை நடத்தியிருந்தனர்.

சர்ச்சைக்குரிய ஹியூமன் இமியூனோகுளோபியூலின் மருந்துக் கொள்வனவு தொடர்பில் அந்த விசாரணை இடம்பெற்றது.

சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளரின் அலுவலகத்தில் காணப்பட்ட ஆவணங்களும் 2 நாள்களாகப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.




சம்பவம் தொடர்பில் சுகாதார அமைச்சின் முன்னாள் செயலாளர் ஜனக ஸ்ரீசந்திரகுப்த, குற்றப்புலனாய்வு திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டு தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகம்
இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகம்
இணைந்து



"தாயகஒலி" பிரதம ஆசிரியர்

*தம்பு சிவா அவர்களின் (தம்பு.சிவசுப்பிரமணியம்)*

(அகவை 80) அமுத விழாவை முன்னிட்டு

நடத்தும்

சிறுகதைப் போட்டி

இருபிரிவுகளாக நடத்தப்படும்

(பரிசுத் தொகை 1 இலட்சம்)

1. சிறுகதைப் போட்டி சகலருக்குமானது
2. பாடசாலை மாணவர்களுக்கான திறந்த போட்டி

* போட்டிக்கான படைப்புகள் அனைத்தும் சொந்தப்படைப்பாக அமைய வேண்டும். ஏற்கனவே வெளிவந்தபடைப்புக்கள் ஏற்றுக்கொள்ள படமாட்டாது.
* பாடசாலை மாணவர்களுக்கான ஆக்கப்படைப்புகள் யாவும் அப் பாடசாலை அதிபரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
* 2024ம் ஆண்டு பெப்ரவரி 15ஆம் (15.02.2024) திகதிக்கு முன் படைப்புகளை அனுப்பி வைக்க வேண்டப்படுகின்றீர்கள்.
* நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

*அனுப்ப வேண்டிய முகவரி :*
இணைப்பாளர்
இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகம்
இல. 9 - 2/1 நெல்சன் பிளேஸ்
கொழும்பு 06.
தொடர்புகளுக்கு 0771 877 999, 011 2364124

# சுனாமி நினைவேந்தல்கள் நிகழ்வுகளை இன்று பல்வேறு மட்டத்திலும் நடத்த ஏற்பாடு!

(ஏ.எல்.எம்.)

கடற்கோள் அனர்த்தம் எனப்படும் சுனாமி ஏற்பட்ட 19ஆவது வருட நினைவேந்தல் நிகழ்வுகள் இன்று 26ஆம் திகதி நாடளாவிய ரீதியில் உணர்வெழுச்சி பூர்வமாக இடம்பெறவுள்ளன.

குறிப்பாக, சுனாமி அனர்த்தம் காரணமாக மிக மோசமான கூடிய உயிரிழப்புக்களையும், சொத்து இழப்புக்களையும் சந்தித்தது கிழக்கு மாகாணம் ஆகும்.

19 ஆவது வருட நினைவேந்தலையொட்டி கிழக்கின் பல்வேறு பிரதேசங்களிலும் நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

தமிழ்ப் பிரதேசங்களில் சுனாமி நினைவுத் தூபிகள் அமைந்துள்ள இடங்களில் நினைவஞ்சலி நிகழ்வுகள், நினைவுப் பேருரைகள், சிரமதானம் என்பன இடம்பெறவுள்ள.

இந்து ஆலயங்களில் உயிர் நீத்த உறவுகளுக்காக விசேட பூசை வழிபாடுகளும் இடம்பெறவுள்ளன.

அதேபோல் முஸ்லிம் பிரதேசங்களில் பள்ளிவாசல்களிலும், ஜனாஸாக்கள் நல்லடக்கம் செய்யப்பட்ட மையவாடி வளாகங்களில் கத்தமுல் குர்ஆன் ஓதி தமாம் செய்யப்படவுள்ளது.

உயிர் நீத்தவர்களின் ஆன்மா ஈடேற்றத்துக்காக விசேட பிரார்த்தனைகளும் இடம்பெறவுள்ளன.

தேசிய பாதுகாப்பு தினமாக இலங்கையில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள இத்தினத்தில் சுனாமி அனர்த்த நினைவுப் பேருரைகளும், சன்மார்க்க சொற்பெழிவுகளும் இடம்பெறவுள்ளன.

சுனாமியால் பெரிதும் பாதிக்கப்பட்ட நிந்தவூரில் இன்று செவ்வாய்க்கிழமை, மரணித்தவர்கள் ஞாபகர்த்த நினைவுப் பேரவை அங்குரார்ப்பண நிகழ்வும், விசேட துஆ பிரார்த்தனையும் இடம்பெறவுள்ளன.

இதன்போது, நிந்தவூரில் உயிரிழந்த உறவுகளுக்காகவும், நிந்தவூர் மண்ணிலிருந்து நாட்டின் பாதுகாப்புத்துறையில் பணியாற்றி வீர மரணமடைந்தவர்களின் சேவையினை நினைவுகூர்ந்தும் நினைவேந்தல் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

நிந்தவூர் கடற்கரை பிர்தௌஸ் ஜும்ஆ பள்ளிவாசலின் பேஷ் இமாம் அல்-ஹாபிழ் மௌலவி ஏ.பீ.எம்.ஷிம்லி (நஹ்ழி) தலைமையில் நினைவேந்தல்கள் நடைபெறவுள்ளன.

இதேவேளை மருதமுனை பிரன்சிப் போரம், மற்றும் ஷம்ஸ் டொப் 97 ஆகிய சமூக அமைப்புக்கள், பெரிய நீலாவணைப் பொலிஸாருடன் இணைந்து சுனாமி ஞாபகார்த்த தின சிரமதான நிகழ்வு ஒன்றை நடத்தவுள்ளன.

# மதுபோதையில் சார்ஜன்ட்டை தாக்கிய சமையல்காரர் கைது

ஹோட்டல் ஒன்றில் பணியாற்றும் சமையல்காரர் செலுத்திச் சென்ற காரை நிறுத்திச் சோதனையிட முயன்ற பொலிஸ் சார்ஜன்ட்டைத் தாக்கிவிட்டுத் தப்பியோட முயன்ற சமையல்காரர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கண்டி பொலிஸ் தலைமையகத்துக்கு முன்பாக கார் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில், சாரதி மதுபோதையில் இருந்தமை தெரியவந்தது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், தாக்குதலுக்குள்ளான பொலிஸ் உத்தியோகத்தர் பேராதனை போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சமையல்காரர் மீது குடிபோதையில் வாகனம் செலுத்தியமை மற்றும் கடமைக்கு இடையூறு செய்தமை ஆகிய குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

# திருநெல்வேலியில் ஆலய உண்டியலை பெயர்த்து எடுத்துச் சென்று பணம் சூறை



(ந.லோகதயாளன்)

திருநெல்வேலி கலாசாலை வீதியில் உள்ள முத்துமாரி அம்மன் ஆலய உண்டியல் பெயர்த்து எடுத்துச் செல்லப்பட்டு களவாடப்பட்டுள்ளது.

ஆலயத்தின் முகப்பில் அமைக்கப்பட்டிருந்த உண்டியலே இவ்வாறு பெயர்த்து எடுத்துச் செல்லப்பட்டுள்ளதாக கோப்பாய் பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

உண்டியலை எடுத்துச் சென்றவர்கள் அதனை அருகில் இருந்த வெளி வளவிற்குள் வைத்து உடைத்து பக்தர்களின் காணிக்கை பணத்தைக் களவாடிவிட்டு உண்டியலைக் கைவிட்டுச் சென்றுள்ளனர்.

இதனை அவதானித்த அயலவர்கள் வழங்கிய தகவலினால் உண்டியல் மீட்கப்பட்டுள்ளது.



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இவர்குற்றவாளியாகக்காணப்பட்டுள்ளார்.

+ 2020 முதல் இன்று வரை மேல் மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக அவரே உள்ளார். இக்காலகட்டத்தில் மேல் மாகாணத்தில் பொலிஸ் காவலில் 24 மரணங்கள் நேர்ந்துள்ளன. தவிரவும், இக் காலகட்டத்தில்தான் மேல் மாகாணத்திலும் காலி மாவட்டத்திலும் ஆக மொத்தம் 13 'என்கவுண்டர்'படுகொலைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

+ ஊடகவியலாளரும் மனித உரிமைகளுக்காகப் போராடுபவருமான தரிந்து ஜெயவர்த்தனவை சமூக ஊடக நடவடிக்கைகள் ஊடாக தேசபந்து தென்னகோன்அச்சுறுத்தினார் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

+ 2009 ஜூன் முதலாம் திகதி சிரேஷ்ட ஊடகவியலாளரும் மனித உரிமைகள் போராளியுமான போத்தல ஜயந்த கடத்தப்பட்டு, மோசமாகத் தாக்கப்பட்டு, சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டார். இது தொடர்பான சாட்சியங்களை மறைத்தவர் தேசபந்து தென்னக்கோன்தான் என்று போத்தல ஜயந்த குற்றம் சுமத்தியிருந்தார்.

+ 2022 மே 9 ஆம் திகதியன்று அலரி மாளிகையில் இருந்து வெளியேறி வந்தவர்கள் காலிமுகத்திடலில் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த அறகலயவினர் மீது மோசமான தாக்குதல்களை நடத்தி, அட்டகாசம் புரிவதற்கு வாய்ப்பளித்தவர் தேசபந்து தென்னக்கோனே என்பது அதிகம் பேசப்பட்ட விடயம்.

+ ஜனாதிபதி கோட்டாபய ஜனாதிபதி மாளிகையை விட்டு ஓடிய தினத்தில் அங்கு கைப்பற்றப்பட்ட ஒரு கோடி 78 லட்சத்து ஐம்பதாயிரம் ரூபா பணம் தொடர்பான விசாரணையில் முறைகேடாகத் தலையிட்டு இவர் குழப்பினார் என்று கூறப்படுகிறது.

+ இந்தப் பணம் தொடர்பான விசாரணையின் போது தேசபந்து தென்னக்கோன் தன்னை அழைத்து அச்சுறுத்தினார் என சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர் நீதிமன்றத்திலேயே முறைப்பாடு செய்திருக்கிறார்.

+ தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் சென்ற ஒரு லொறியை பொலிஸ் அதிகாரிகள் வழிமறித்து சோதிக்க முற்பட்ட போது, தென்னக்கோன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு அந்த அதிகாரிகளை தடுத்துள்ளார். இந்த லொறியில்தான் ஈஸ்டர் குண்டுத் தாக்குதலுக்கான வெடி மருந்துகள் கொண்டு செல்லப்பட்டன என்று இப்போது கூறப்படுகின்றது.

+ ஈஸ்டர் ஞயிறுக் குண்டுத் தாக்குதல் விசாரணைகளைக் குழப்பியடித்தவரும் இவரே என்று குற்றம் சுமத்தப்படுகிறது.

+ தவிரவும் கொவிட் காலத்தில் பல குளறுபடிகளில் ஈடுபட்டமை, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஷானி அபேசேகரவை சட்ட விரோதமான முறையில் கைது செய்தமை என்று பல குற்றச்சாட்டுகள் அடுக்கப்படுகின்றன.

இத்தகைய பின்புலத்தில், இவ்வளவு 'நற்சான்றுகளையும்' உடையவரை நாட்டின் பொலிஸ் துறையின் தலைவராக நீடிக்க அனுமதித்தால் நாடு உருப்பட்ட மாதிரித்தான்....!

\+ \+ \+

'ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்பார்கள். அப்படியான தேர்தல் முடிவு ஒன்று இது.

வேறு தேர்தல்கள் இல்லாதமையால் தெற்கில் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தேர்தல்களையும் கவனத்தில் எடுக்க வேண்டியுள்ளது.

ரூவான்வெல பல நோக்குக் கூட்டுறவு சங்கத்துக்கு நேற்று முன்தினம் தேர்தல் நடந்தது.

அந்த இயக்குநர் சபையை 1994 தொடக்கம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய மக்கள் ஐக்கிய முன்னணி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆகியவை மாறி மாறிக் கைப்பற்றி நடத்தி வந்தன.

நேற்றைய தேர்தலில் முழுமையாக 9 இயக்குநர்கள் பதவிகளையும் சஜித்தின் ஐக்கிய மக்கள் சக்தி சார்பான தரப்பினர் ஒட்டுமொத்தமாகக் கைப்பற்றி உள்ளனர்.

2017 இல் உருவாக்கப்பட்ட மொட்டுக் கட்சியும் இப்படித்தான் 2018 உள்ளூராட்சி தேர்தல்கள், 2019 ஜனாதிபதி தேர்தல், 2020 நாடாளுமன்றத் தேர்தல் ஆகியவற்றில் பெருவெற்றி பெற முன்னர் 2017இலும் 2018 இலும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் தனது செல்வாக்கை வலுவாகக் காட்டி வந்தமை குறிப்பிடத்தக்கது.

'யானை வரும் பின்னே...மணி ஓசை வரும் முன்னே...!' என்பார்கள். இங்கு சற்று மாறுபாடாக தொலைபேசி ஒலி முன்னே வருகின்றது போலும்...

## பொலிஸ் கான்ஸ்டபிள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தெஷாஞ்சன தரிந்த என்ற கான்ஸ்டபிளே நேற்று இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

களுத்துறை, கட்டுகுருந்த கடலில் மேற்படி கான்ஸ்டபிள் தண்ணீரில் மூழ்கியபோது, அவருடன் இருந்த மற்ற நண்பர்கள் உதவி கேட்டு கூச்சலிட்டனர்.

பின்னர், அப்பகுதி மக்கள் வந்து கான்ஸ்டபிளை வைத்தியசாலையில் சேர்க்க நடவடிக்கை எடுத்தனர்.

எவ்வாறாயினும், வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டபோது அவர் உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை களுத்துறை தெற்கு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## சுனாமியில் உயிரிழந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தெரிவித்துள்ளது.

2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி எனும் ஆழிப்பேரலையால் உயிரிழந்தவர்களை நினைவுகூரும் முகமாக இவ்வாறு இரண்டு நிமிடங்கள் மௌன அஞ்சலி செலுத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இன்று சுனாமிப் பேரழிவின் 19 ஆவது ஆண்டு நிறைவாகும். இது உலகின் மிக மோசமான மற்றும் மிகவும் அழிவுகரமான இயற்கைபேரழிவுகளில்ஒன்றாகும். இது இந்தியப் பெருங்கடலில் 10 நாடுகளுக்கு மேல் தாக்கத்தை ஏற்படுத்தியது என்பது குறிப்பிடத்தக்கது.



# பதுளையில் பெண்ணொருவரைக் கரம் பிடிக்க 19 தடவைகள் இலங்கை வந்த இந்தியப் பிரஜை

## பாலியல் வல்லுறவு முயற்சிக் குற்றச்சாட்டில் கைது

(ராமு தனராஜ்)

பதுளை, 3 ஆம் கட்டை பகுதியில் வீடொன்றுக்குள் நுழைந்து பெண் ஒருவரைப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்த முயற்சித்தார் எனக் கூறப்படும் இந்தியப் பிரஜை ஒருவர் சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

28 வயதுடைய இந்தியப் பிரஜையே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்

கைது செய்யப்பட்ட சந்தேகநபர், மேற்படி பெண்ணைத் திருமணம் செய்து கொள்ளும் நோக்கில் சுமார் 19 தடவைகள் இலங்கைக்கு வந்து பெண்ணின் வீட்டுக்கும் சென்றுள்ளார் என்று பொலிஸாரிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.



மேற்படி பெண்ணுக்கும் சந்தேகநபருக்கும் இடையிலான உறவில் தமக்கு உடன்பாடு இன்மையால், வீட்டுக்கு வர வேண்டாம் என்று பெண்ணின் பெற்றோர் அந்த நபரிடம் கூறியுள்ளனர் என்று பொலிஸாரின் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இதற்குச் சந்தேகநபர் உடன்படவில்லை. இந்நிலையில் அவர் மேற்படி பெண்ணின் வீட்டுக்குச் சென்றுள்ளார். இதையடுத்து அந்தப் பெண்ணைப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்த அவர் முயற்சி செய்தார் என்று பெண்ணின் பெற்றோரால் பதுளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளிக்கப்பட்டதன் பின்னர் சந்தேகநபரான இந்தியப் பிரஜை பதுளைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலதிக விசாரணைகளை பதுளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## காணாமல்போன மாணவிகள் அறையொன்றில் கண்டுபிடிப்பு



குருநாகல் பகுதியில் கடந்த 25 நாள்களாகக் காணாமல்போயிருந்த இரண்டு பாடசாலை மாணவிகளும் அறையொன்றில் தங்கியிருந்த நிலையில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று மாத்தறை தலைமையகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

18 மற்றும் 19 வயதுடைய இரண்டு பாடசாலை மாணவிகளே மாத்தறை, உயன்வத்த பிரதேசத்தில் அறையொன்றில் தங்கியிருந்தபோது நேற்றுக் காலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

கலகெதர மற்றும் மாவத்தகமை பகுதிகளைச் சேர்ந்த இரண்டு மாணவிகளே இவ்வாறு காணாமல்போயிருந்தனர்.

## மன்னார் விபத்தில் ஒருவர் உயிரிழப்பு



(மன்னார் நிருபர்)

மன்னார், நானாட்டான் – முத்தரிப்புத்துறை பிரதான வீதியில் நேற்று மாலை இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். மேலுமொரு இளைஞர் படுகாயமடைந்த நிலையில் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

முசலி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள முத்தரிப்புத்துறை கிராமத்தில் இருந்து நானாட்டான் நோக்கி மோட்டார் சைக்கிள் ஒன்றில் இரண்டு இளைஞர்கள் பயணித்த நிலையில், வீதியில் உள்ள வளைவு ஒன்றில் மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியோரம் காணப்பட்ட பாலத்தினுள் வீழ்ந்துள்ளது.

இதன்போது மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்ற முத்தரிப்புத்துறை கிராமத்தைச் சேர்ந்த வயது 28 வயதுடைய இளைஞர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். மற்றைய இளைஞர் படுகாயமடைந்துள்ளார்.

படுகாயமடைந்த இளைஞர் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் மன்னார் பொது வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை முருங்கன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

### அமெரிக்காவில் இருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

அதேவேளை, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியுடன் இணைந்து செயற்படும் பங்காளிக் கட்சித் தலைவர்களுடனும் கூட்டணி நடவடிக்கை பற்றி ஆலோசனை நடத்தப்படவுள்ளது.

### சம்பந்தன் - சுமந்திரன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

“ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் தமிழ்க் கட்சிகள் நடத்தும் சந்திப்புக்களின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனும், கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரனும் எல்லை மீறிப் பேசுகின்றனர். அரசமைப்பை மீறி எதனையும் செய்ய முடியாது என்பதை அரசியலில் முதிர்ச்சி பெற்ற அவர்கள் இருவரும் புரிந்துகொள்ள வேண்டும்.

இறுதியாக ஜனாதிபதியுடன் வடக்கு – கிழக்கு தமிழ்க் கட்சிகள் நடத்திய பேச்சின்போது வெறும் 4 தமிழ் எம்.பிக்கள் மாத்திரம் கலந்துகொண்டுள்ளனர். அதில் பங்கேற்ற கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன், ஜனாதிபதியை மிரட்டும் வகையில் பேசியுள்ளார். இந்திய – இலங்கை ஒப்பந்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தி இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண வேண்டும் என்றும், இல்லையேல் தாம் சர்வதேசத்தை நாடுவோம் என்றும் சம்பந்தன் எச்சரிக்கை விடுத்துள்ளார். அது ஒருபோதும் சாத்தியப்படாத விடயமாகும். சர்வதேசத்தை நம்பி ஏமாறாதீர்கள் என்று சம்பந்தன், சுமந்திரனிடம் சொல்லி வைக்கின்றேன்.” – என்றார்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# யதார்த்தம் புரியாத தமிழினம்

வெளிப்படையாகத் தெரியாவிட்டாலும் பேயுருக் கொண்டு நிற்கின்றது பேரினவாதம்.

தமிழர் தேசத்தின் அடிப்படைக் கட்டுமானங்களை இலக்கு வைத்துத் தகர்த்தழித்து, தமிழர் தாயகத்தை சிங்கள மயப்படுத்தும் அதன் ஆக்கிரமிப்பு நடவடிக்கை சத்தம் சந்தடியின்றி - ஆரவாரமில்லாமல் - அரங்கேறிக் கொண்டிருக்கின்றது. தீவிரமாகத் தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

ஒவ்வொரு கணமும் தமிழர் தாயகத்தை - அதன் தனித்துவத்தை - நாம் சிறுகச் சிறுக இழந்து கொண்டிருக்கிறோம்.

இந்த யதார்த்தம் பற்றிய உணர்வின்றி, அறிவின்றி, அரசியல் பிரக்ஞையின்றி நமது தலைவர்களும் நாங்களும் சின்னத்தனமான அரசியல் நடத்திக் கொண்டிருக்கிறோம்.

'அடைந்தால் மகாதேவி, இல்லையேல் மரணதேவி' என்று 'மகாதேவி' சினிமாப் பாணியில் இலக்குகள் பற்றிய கோஷத்தோடு, முட்டாள் தனமான - முன் யோசனை இல்லாத - அரசியல் செய்து கொண்டிருக்கின்றோம்.

இலக்குத் தப்பக்கூடாதுதான். ஆனால், அதற்காக வழிப்பாதையையே தவற விட்டுவிட்டு, இலக்குப் பற்றி பேசிக்கொண்டும், பிரபலாபித்துக் கொண்டும் இருப்பதில் அர்த்தமில்லை.

தமிழர் தாயகத்தைத் தற்காலிகமாகக் காபந்து பண்ணிக்கொண்டு, இலக்கு நோக்கிய போராட்டத்தைமுன்னெடுப்பதற்குதமிழர்தரப்புக்குஅகப் பலமாக விடுதலைப் புலிகள் இருந்த காலம் இப்போது இல்லை.

புறப்பலமாக எமக்கு உதவுவதாகக் கூறிக் கொண்டு முன்வந்த இந்தியத் தரப்பும் இப்போது பேரினவாதத்தால் சூறையாடப்பட்டு விழுங்கப்பட்டு கொண்டிருக்கும் தமிழர் தேசத்தை காப்பாற்றும் வலுவிலும் இல்லை, எண்ணத்திலும் இல்லை. சர்வதேச சமூகமும் அப்படித்தான்.

தமிழர் தேசத்தை இருக்கின்ற அளவிலாவது தக்க வைக்கும் அகப்பலமோ, புறப்பலமோ, அரசியல் பலமோ, சர்வதேச ஆதரவுப் பலமோ நம்வசம் இல்லை என்பது கண் கூடு.

இல்லாத ஒன்றைத் தந்திரத்தால் நாடும் - சமயோசித புத்தியால் ஈட்டும் - அரசியல் ஞானமும் நம்மில் பலரிடமும் இல்லை.

அப்படிச் செயற்படக்கூடிய நம்மவர்களை நாமே குழப்பி, 'துரோகி' பட்டமும் சூட்டி, நமக்கு நாமே தலையில் மண் அள்ளிப் போட்டுக் கொண்டிருக்கின்றோம்.

தமிழர் தேசத்தின் தனித்துவத்தைச் சிதைத்தழிக்கும் தனது நெடுநாள் பேரவாவை செயற்படுத்துவதற்கு இதுதான் உரிய தருணம் என்பது பௌத்த - சிங்களப் பேரினவாதத்துக்கு நன்கு தெரியும். அதைத் தான் முன்னெடுப்பதன் மூலம் இலங்கை தீவில் தமிழினத்திற்கான பிறப்புரிமைக் கோரிக்கையை நிர்மூலமாக்கி விடலாம் என்பது அதன் கபடத் திட்டம். அந்த சதிநாச வேலையை இப்போது தீவிரமாகத் தான் முன்னெடுத்தால் அதனைக் கேட்பார், தடுப்பார் யாருமில்லை என்பதும் சிங்களத்துக்கு நன்கு தெரியும்.

அதற்கு எதிராகத் தமிழர்கள் கூக்குரலிடுவதுடன் அடங்கிப் போவர், அவர்களுக்காக யாரும் வரார், எங்கள் அராஜகத்தை தடுக்க முடியாது என்பது பௌத்த - சிங்களப் பேரினவாதத்தின் கருத்தியல். அதுவே யதார்த்தத்தில் வெற்றிகரமாக நடந்தேறிக் கொண்டும் இருக்கின்றது.

அந்த அராஜகத்தைத் தடுப்பதற்கான அகப் பலத்தையும் புறப்பலத்தையும் தொலைத்து விட்ட தமிழர்கள், தந்திர அரசியல் மூலம்தான் அதைத் தடுத்து நிறுத்த வேண்டும். தடுத்து நிறுத்த முடியும்.

தாயகப் பிறப்புரிமை என்றும், பிரிக்க முடியாத தாயகத்தின் சுயநிர்ணய உரித்து என்றும், சமஷ்டி என்றும், பொதுஜன வாக்கெடுப்பு என்றும் மட்டுமே பிடிச்சுறாவித்தனத்துடன், கொள்கைப் பிடிப்பாலர்கள் போல வெற்றுவேட்டு அரசியல் செய்து, பேரினவாதத்தை அதன் தீவிரப் போக்கில் செயற்படத் தூண்டி நிற்போரிடம் தமிழர் தாயகத்தைத் காப்பாற்றித் தக்கவைக்கும் உருப்படியான யதார்த்தபூர்வத் திட்டமோ, யோசனையோ, எத்தனமோ, எண்ணமோ ஏதும் கிடையாது என்பதுதான் துர்ப்பாக்கிய உண்மை.

சர்வதேச அரசியல் கள நிலவரங்களை நன்கு பகுப்பாய்வு செய்து பார்ப்போமானால் இவ்விடயத்தில் பாதுகாப்பற்ற தனிமரமாக நாம் தனித்து விடப்பட்டிருக்கும் யதார்த்தம் புரியும். அதன் ஆபத்து நிலைமை விளங்கும்.

தமிழர் தேசம் இராணுவ வலுச் சமநிலையில் உச்சமாக இருந்த காலகட்டத்தில் - இந்த மிலேனியத்தின் ஆரம்பத்தில் - தனது பின்னடைவு நிலைமை புரிந்து, சிங்கள ஆட்சிப் பீடம் தந்திரம் செய்தது. தனது நிலைப்பாட்டை விட்டுக் கொடுத்து இறங்குவதாகக் காட்டிக் கொண்டது.

இராணுவ வலுச் சமநிலையில் தமிழர் தரப்பைஅங்கீகரித்து,அதற்குசரிசமஅந்தஸ்து அளிப்பதாகக் காட்டிக் கொண்டது. சர்வதேச அரங்கில் ஒன்றாக - சரிசமனாக அமர்ந்து பேச முன் வந்தது. மேசையின் ஒரு பக்கத்தில் புலிக் கொடியுடன் தமிழர் பிரதிநிதிகள். மறுபக்கத்தில் சிங்க(ள)க் கொடியுடன் சிங்கள அரசின் பிரதிநிதிகள். சர்வதேச அரங்கில் தமிழரின் சுயநிர்ணயக் கோரிக்கையை ஏற்று அங்கீகரிக்கும் நிலைக்கு சிங்களம் விட்டுக் கொடுத்து இறங்கும் தந்திரத்தைச் செய்தது. பின்னர் காலம் பார்த்துத் தன்னைப் பலப்படுத்தி, எம்மை வீழ்த்தி, இன்று எங்களை முழுமையாக அடிமைப்படுத்தக் கங்கணம் கட்டி நிற்கின்றது. இது சரித்திரம்.

இதிலிருந்து இன்னமும் நாம் பாடம் படிக்கவில்லை. பின்னடைவு நிலையைப் புரிந்து கொண்டு, சமயோசிதமாக நடவடிக்கை எடுப்பவர்களை - நடப்பவர்களை - நாம் அனுமதிப்பதில்லை. நமது கொள்கைப் பிடிப்பு, பற்றுறுதி என்ற வாய்ச்சவடால் நாடகம் கடைசியில் நம்மை ஒன்றுமே இல்லாத அநாதை இனமாக அழிவுக்கு இட்டுச் செல்லப் போகின்றது. இது புரியாத தமிழினம் என்பதுதான் நமது துர்ப்பாக்கியம்.

# கடலில் கலந்த எண்ணெய் கழிவுகள்: நிவாரணம் கோரி மீனவர்கள் போராட்டம்



கடலில் கலந்த எண்ணெய் கழிவுகள் காரணமாக வாழ்வாதாரம் பாதிக்கப் பட்டுள்ளதால், அரசு நிவாரணம் வழங்க வேண்டும் எனக் கோரிகும்மிடிப்பூண்டி அருகே ஆரம்பாக்கத்தில் மீனவர்கள் மனிதச் சங்கிலி போராட்டத்தில் ஈடு பட்டனர்.

சமீபத்தில் பெய்த அதிக மழையின் போது, மணலி பகுதியில் உள்ள சென்னை பெட்ரோலியம் கொர்ப்பரேஷன் நிறுவனத்தில் எண்ணெய் கசிவு ஏற்பட்டு, மழைநீரோடு கலந்து சென்னை- மணலி புதுநகர், எண்ணூர் உள்ளிட்ட பகுதிகளில் பரவியது. அது கொசஸ்தலை ஆறு முகத்துவாரம் வழியாக எண ணூர் கடற்பகுதிகளில் கலந்தது.

எண்ணெய் படலம் பழவேற்காடு மற்றும் அதைச் சுற்றியுள்ள அரங்க குப்பம், கோரைக்குப்பம், கருங்காலி, பள்ளப்பாடு குப்பம் பகுதிகளில் உள்ள கடற்கரை பகுதியிலும் பரவியுள்ளது. இதனால், பழவேற்காடு, ஆரம்பாக்கம் உள்ளிட்ட பகுதிகளின் மீனவர்கள் பழவேற்காடு கடல் பகுதியில் மீன் பிடிக்க முடியாமல், தங்களின் வாழ்வா தாரம் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரி வித்துள்ளனர்.

இந்த நிலையில், கடலில் எண்ணெய் கலக்கக் காரணமான நிறுவனத்தைக் கண்டித்தும், பாதிக்கப்பட்டுள்ள மீனவர் களுக்கு அரசு உரிய நிவாரணம் வழங்கக் கோரியும், கும்மிடிப்பூண்டி அருகே ஆரம் பாக்கம் பஜார் பகுதியில், சென்னை- கொல்கத்தா தேசிய நெடுஞ்சாலையின் இணைப்பு சாலையோரம் மீனவர்கள் மனிதச் சங்கிலி போராட்டத்தில் ஈடு பட்டனர். தமிழ்நாடு - பழவேற்காடு மீனவர்கள் ஒருங்கிணைந்த சங்கம் சார்பில் நடைபெற்ற இந்த போராட்டத்தில், பழவேற்காடு கடற்பகுதியில் மீன் பிடி தொழிலில் ஈடுபட்டு வரும் ஆரம்பாக்கம் மற்றும் அதை ஒட்டியுள்ள மீனவ கிரா மங்களைச் சேர்ந்த 300 மீனவர்கள் பங்கேற்று, தங்கள் கோரிக்கையை முன் வைத்தனர்.

# அ.தி.மு.க. அணிகளை இணைக்க முடியும்! - சசிகலா நம்பிக்கை

அ.தி.மு.கவின் அனைத்து அணி களையும் இணைக்க முடியும் என வி.கே. சசிகலா நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் சென்னையில் அவர் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

"அரசு எதற்கெடுத்தாலும் பணம் இல்லை என சொல்கிறது.

ஆனால், தமிழக அரசு, சி.எம்.டி.ஏ, சென்னை மாநகராட்சி, தனியார் பங்களிப்பு என மொத்தம் 40 கோடி ரூபா செலவில் கார் பந்தயம் நடத்த போர்க்கால அடிப்படையில் பணிகளை மேற்கொண்டனர்.

இதற்கான தொகை எங்கிருந்து வருகிறது. இதனால் மக்களுக்கு என்ன பயன், ஆனால் பேரிடரின்போது மக்களை மீட்க போர்க்கால அடிப்படையில்



பணிகளைச் செய்யவில்லை. விளம் பரத்தை மட்டுமே திமுக அரசு நம்பியி ருக்கிறது. கல்விக் கடனை ரத்து செய்ய வில்லை.

பால் தட்டுப்பாடு நிலவுகிறது. தமிழக மக்களை காப்பாற்றும் கடமை எங்களுக்கு இருக்கிறது. இங்கு தி.மு.க. ஆட்சி தொடர்ந்தால் இலங்கைக்கு ஏற்பட்ட நிலைதான் வரும். அதை மக்களும் உணர்ந்துள்ளனர். தற்போது தி.மு.க. அரசு தெளிவில்லாமல் செயல் பட்டு வருகிறது. அவர்கள் தங்களை திருத்தி கொண்டுவாக்களித்த மக்களை வஞ்சிக்காமல் இருக்க வேண்டும்.

அ.தி.மு.கவின் அனைத்து அணி களையும் சேர்க்க முடியும். எம்.ஜி.ஆர், ஜெயலலிதாவின் கருத்துகளை நிறை வேற்றும் பொறுப்பு பிரிந்த அனைத்து அணியினருக்கும் இருக்கிறது. விரைவில் நல்ல முடிவு வரும்."- என்றார்.

# 3 புதிய குற்றவியல் தடுப்பு சட்டங்களுக்கு குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு ஒப்புதல்!

பழைய குற்றவியல் சட்டங்களை மறு சீரமைக்கும் விதமாக மத்திய அரசு புதிதாக கொண்டு வந்த மூன்று குற்றவியல் சட்ட மசோதாக்களும் மக்களவையில் அண்மையில் நிறைவேற்றப்பட்டது.

இதற்கு குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு தற்போது ஒப்புதல் அளித்துள்ளார்.

பாரதிய நியாய சன்ஹிதா, பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா, பாரதிய சாக்ஷியா ஆகிய 3 மசோதாக்களையும் மக்களவையில் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா கடந்த 12 திகதி அறிமுகம் செய்தார். இதன் மீதான விவாதம் மக்களவையில் கடந்த வாரம் நடந்தது. தொடர்ந்து குரல் வாக்கெடுப்பு மூலம் நிறைவேற்றப்பட்டது.

இந்த நிலையில், மக்களவையில் நிறைவேற்றப்பட்ட இந்த 3 புதிய குற்ற



வியல் தடுப்பு சட்டங்களுக்கு குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு ஒப்புதல் அளித்துள்ளார்.

# ஹமாஸ் சுரங்க குழியில் இருந்து 5 கைதிகளின் உடல்கள் மீட்பு!



காசாவில் ஹமாஸ் அமைப்பினர் அமைத்த சுரங்க குழியில் இருந்து 5 பணயக் கைதிகளின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன என இஸ்ரேல் இராணுவம் தகவல் வெளியிட்டுள்ளது.

இடன் சிஷெர்யா, சிவ் டடு, எலியொ டுலிடனொ, நிக் பெய்சர், ரொன் ஷெர்மென் ஆகிய 5 பேரை ஹமாஸ் சுரங்க குழியில் இருந்து இஸ்ரேல் பாதுகாப்புப்படையினர் சடலமாக மீட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஒரு மாதத்திற்கு மேலாக பாலஸ்தீனத்தின் காசா பகுதியில் இஸ்ரேல் போர் நடத்தி வருகின்ற நிலையில் ஹமாஸ் தாக்குதலுக்கு திருப்பி கொடுப்பதாக நினைத்து நடைபெற்று வரும் போரில் இதுவரை 20 ஆயிரத்து 424 பாலஸ்தீன மக்கள் உயிரிழந்துள்ளனர்.

மேலும், ஐக்கிய நாடுகள் சபையின் போர் நிறுத்த கோரிக்கைகளையும் கேட்காமல் பாலஸ்தீனத்தில் இஸ்ரேல் போர் தாக்குதல்களை மேற்கொண்டு வருகிறது.

இதனிடையே, காசாமுனையில் உள்ள பிணைக் கைதிகளில் 100க்கும் மேற்பட்டோரை ஒப்பந்த அடிப்படையில் ஹமாஸ் விடுவித்துள்ளதோடு, பணயக் கைதிகளை மீட்கும் நடவடிக்கையில் இஸ்ரேல் ஈடுபட்டு வந்தது.

இந்த நிலையில், காசாமுனையில் உள்ள 5 பேர் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர் என இஸ்ரேல் இராணுவம் தகவல் தெரிவித்துள்ளது.

மேலும், மீட்கப்பட்ட சடலங்களை இஸ்ரேல் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

# நூறாண்டு கால வழக்கத்தை மாற்றிய உக்ரைனில் நத்தார் கொண்டாட்டம்!





நூறு ஆண்டுகளாக பின்பற்றி வரும் வழக்கத்தினை மாற்றி உக்ரைனில் நத்தார் இந்த ஆண்டு கொண்டாடப்பட்டது.

ரஷ்யாவுடன் நிகழும் போரின் மத்தியிலும் உக்ரைனில் நேற்று நத்தர் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

உக்ரைன் மக்கள்தொகையில் பெரும்பான்மையானவர்கள் கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்கள் பண்டிகை கொண்டாடுவது ரஷ்ய ஆர்த்தடக்ஸ் தேவாலயத்தின் வழிகாட்டுதலின்படியாகும். இதனால் உக்ரைனியர்கள் ரோமானிய கால ஜூலியன் கலண்டரின்படி ஜனவரி மாதம் 7 ஆம் திகதியன்று நத்தார் பண்டிகையை கொண்டாடி வந்தனர்.

இந்தை நிலையில், கடந்த 2022 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம், ரஷ்யா, தனது அண்டை நாடான உக்ரைன் மீது “சிறப்பு இராணுவ நடவடிக்கை” எனும் பெயரில் தாக்குதல் நடத்தி ஆக்ரமித்தது.

ஆனால், இதற்கு அடிபணியாத உக்ரைன், அமெரிக்கா மற்றும் மேற்கத்தைய நாடுகளின் உதவியுடன் ரஷ்யாவை எதிர்த்து போரிட்டு வருகிறது.

இரு தரப்பிலும் பலத்த உயிரிழப்புகள் மற்றும் உடமை சேதங்களுடன், 665 நாட்களை கடந்து போர் தீவிரமாக நடைபெற்று வருகிறது.

இவ்வாறான சூழலில் தான் உலகம் முழுவதும் நேற்று நத்தார் பண்டிகை கோலாகலமாக கொண்டாடப்பட்ட நிலையில் உக்ரைன் இது தொடர்பாக முக்கிய முடிவினை எடுத்தது.

அதன்படி, கடந்த ஜூலை மாதம் உக்ரைன் அரசு, ரஷ்யாவை எதிர்க்கும் விதமாக கிரிகோரியன் கலண்டரின்படி உலகம் முழுவதும் கொண்டாடும் டிசம்பர் 25 அன்றே கிறிஸ்மஸ் இனைக் கொண்டாட முடிவெடுத்தது.

சுமார் ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக கடைபிடித்து வந்த வழக்கத்தை மாற்றி முதன் முறையாக உக்ரைன் மக்கள் நேற்று கிறிஸ்மஸ் கொண்டாடினர்.

ரஷ்ய ஆக்கிரமிப்பின் பின்னர், ரஷ்யாவை நினைவுபடுத்தும் தெருப் பெயர்களை நீக்குவதையும், அந்த நாட்டுடன் தொடர்புள்ள புராதன கலைச் சின்னங்களை அகற்றுவதையும் உக்ரைன் தீவிரமாக செய்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

## வவுனியா மாவட்டத்தில்

# காணி மத்தியஸ்தர் சபை ஊடாக 238 காணிப் பிணக்குகளுக்குத் தீர்வு

(கி.வசந்தரூபன்)

வவுனியா மாவட்டத்தில் விசேட காணி மத்தியஸ்தர் சபை ஊடாக 238 காணிப் பிணக்குகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளதாக நீதி அமைச்சின் மாவட்ட பயிற்சி உத்தியோகத்தர் இ.விமல்ராஜ் தெரிவித்துள்ளார்.

வவுனியா பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற வவுனியா விசேட காணி மத்தியஸ் தர் சபையின் 5 ஆவது வருட பூர்த்தி நிகழ்வில் அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் இதன் போது மேலும் தெரிவிக்கையில் –




வவுனியா மாவட்ட விசேட காணி மத் தியஸ்தர் சபை ஆரம்பித்து 5 வருடத்தை பூர்த்தி செய்கிறது. வடக்கு – கிழக்கு மாகாணங்களில் காணப்படும் காணிப் பிணக்குளுக்கு தீர்வு காண்பதற்காக காணி மத்தியஸ்தர் சபைகள் உருவாக் கப்பட்டன. தற்போது 16 மாவட்டங் களில் அது இயங்கி வருகிறது. ஏனைய மாவட்டங்களில் உருவாக்க முயற்சிகள் இடம்பெறுகின்றன.

காணிப் பிணக்குகள் சிக்கல் நிறைந்தவை. அவற்றை நேர்த்தியா கக் கையாள வேண்டும். அந்த வகை யில் வவுனியா மாவட்ட காணி மத்தியஸ் தர் சபையில் கடந்த 5 வருடங்களில் ஆயிரத்து 184 காணிப் பிணக்குகள் ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளன. இவை நீதிமன்றம், பொலிஸ், நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள் ஊடாக ஆற்றுப் படுத்தப்பட்டன.

பல்வேறு இடம்பாடுகளுக்கு மத்தி யில் கொவிட் காலப்பகுதி மற்றும் பொருளாதார நெருக்கடி காலம் உள்ள டங்கலாக எமது மாவட்டக் காணி மத்தி யஸ்தர் சபை உறுப்பினர்கள் செயற்பட்டு 238 காணிப் பிணக்குகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது. 260 காணிப் பிணக்குகள் இரு பகுதியினரின் இணக் கப்பாட்டுடன் தீர்வு காண முடியாத நிலையில் அவற்றுக்கு தீர்க்கப்படா மைக்கான சான்றிதழ் வழங்கபடபட் டுள்ளது.

59 பிணக்குள் முறைப்பாட்டாளர் களால் மீளப் பெறப்பட்டுள்ளன. ஏனைய பிணக்குகளையும் தீர்வு காணும் வகை யில் காணி மத்தியஸ்தர் சபையில் அமர்வுகள் இடம்பெற்று வருகின்றன. இம் மத்தியஸ்தர் சபை ஊடாக மக்கள் சிரமங்கள் இன்றி இரு பகுதி இணக்கப் பாட்டுடன் காணி பிணக்களுக்குத் தீர்வு காண முடியும். – என அவர் மேலும் தெரிவித்தார்.

# கிறிஸ்மஸ் விடுமுறை தினத்தில் யாழில் மது விற்ற மூவர் கைது!





கிறிஸ்மஸ் விடுமுறை தினமான நேற்று யாழ்ப்பாண நகரில் சட்ட விரோதமாக மதுபானம் விற்ற மூவர் யாழ்ப்பாண மாவட்டப் பொலிஸ் புல னாய்வுப் பிரிவினரால் கைது செய் யப்பட்டுள்ளனர்

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் செயல் படும் யாழ்ப்பாண மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து யாழ்ப் பாணம் கஸ்தூரியர் வீதி, கலட்டி, மற்றும் முலவை சந்திப் பகுதியில் நடத்தப்பட்ட தேடுதலின் போது மூவர் கைது செய்யப்பட்டனர்.

சாராயம்117 கால் போத்தல்களும் 9 பெரிய போத்தல்களும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.




# உலகத் தமிழர் பேரவையின் உறுப்பினர்களின் படங்கள் தாங்கிய பதாகை மீது முட்டை வீச்சு

## வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் ஆவேசம்

(கி.வசந்தரூபன்)

வவுனியாவில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் போராட்டம் ஆரம்பித்து 2500 ஆவது நாளான நேற்று உலகத் தமிழர் பேரவையின் உறுப்பினர்களின் படம் தாங்கிய பதாகையின் மீது முட்டை வீசி தமது எதிர்ப்பினை வெளிப்படுத்தினர்.

அவர்களுடைய போராட்ட கொட்டகைக்கு முன்பாக கவன ஈர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள், உலகத் தமிழர் பேரவையினரின் செயற்பாடு தமிழ் மக்களுக்கு விரோதமானவை எனவும், அவர்கள் இமாலயத் துரோகிகள் எனவும் தெரிவித்தமையோடு தமிழ் மக்களுடைய அபிலாசைகளையும் இறைமையும் பாதுகாப்பதற்கு பொது வாக்கெடுப்பு ஒன்றே உரிய தீர்வு எனவும் தெரிவித்தனர்.

இதனை அடுத்து அவர்கள் அங்கு மரம் ஒன்றில் கட்டப்பட்டிருந்த உலகத் தமிழர் பேரவை உறுப்பினர்களின் படம் மீது முட்டை வீசித் தமது எதிர்ப்பினையும் வெளிப்படுத்தினர்.














# யாழ். காக்கைதீவில் இரு படகுகளில் 256 கிலோ மஞ்சள் மூடைகள் மீட்பு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், டிச.26

யாழ்ப்பாணம் காக்கைதீவுப் பகுதியில் இரு படகுகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 256 கிலோ மஞ்சள் இராணுவத்தினரின் சுற்றி வளைப்பின் போது கைப்பற்றப்பட்டுள்ளது.

காக்கைதீவுப் பகுதியில் படகில் மஞ்சள் மறைத்து வைக்கப்பட்டிருப்பதாகக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையிலேயே இது கைப்பற்றப்பட்டுள்ளது.

16 மூடைகளில் பொதி செய்யப்பட்ட நிலையிலேயே இந்த 256 கிலோ மஞ்சளும் நேற்று மதியம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

கடல் கரையில் இருந்து வள்ளத்தில் 8 மூடைகளும், அருகில் இருந்த பற்றையில் மறைத்து வைத்திருந்த மேலும் ஒரு படகில் இருந்த நிலையில் மேலும் 8 மூடைகளுமாகவே இந்த 16 மூடை மஞ்சளும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்ட 16 மூடை மஞ்சள் மூடைகளும் இந்தியாவில் இருந்து கடத்தி வரப்பட்டு, வரத்தக நோக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படத் தயாராக இருந்த சமயமே கைப்பற்றப்பட்டதாகத் தெரியவருகின்றது.

கைப்பற்றப்பட்ட மஞ்சள் மூடைகள் சட்ட நடவடிக்கைக்காக விசேட அதிரடிப்படையினரிடம் கையளிக்கப்பட்டுள்ளன.



# தாவடியைச் சேர்ந்த ஆண் சிசு டெங்குக் காய்ச்சலால் மரணம்





யாழ்ப்பாணம் தாவடியைச் சேர்ந்த ஆண் குழந்தையொன்று டெங்குக் காய்ச்சல் காரணமாக உயிரிழந்துள்ளது.

மதுரன் கிருத்திஸ் என்ற பதினொரு மாதக் குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த குழந்தை சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

தற்போது யாழ்ப்பாண மாவட்டத்தில் டெங்குக் காய்ச்சல் தீவிரமாகப் பரவும் நிலையில் பொதுமக்களை அவதானமாக இருக்குமாறு சுகாதார தரப்புக்கள் எச்சரிக்கை விடுத்துள்ளன.

# மலேஷியாவிடமிருந்து விமானம் கொள்வனவு

ஸ்ரீலங்கன் விமான சேவை புதிதாக ஏ - 320 ரக விமானம் ஒன்றை மலேஷியாவிடம் இருந்து குத்தகை அடிப்படையில் கொள்வனவு செய்துள்ளது.

இதன் அடிப்படையில் தற்போது ஸ்ரீ லங்கன் விமான சேவைக்கு சொந்தமான 22 விமானங்கள், சர்வதேச சேவைகளை மேற்கொள்கின்றன என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆறு ஆண்டுகள் குத்தகை அடிப்படையில் பெறப்பட்ட இந்த விமானம் முதலாவது பயணமாக எதிர்வரும் 29 ஆம் திகதி மாலைத்தீவிற்கு பயணிக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விமானத்தின் எரிபொருள் பாவனையை கட்டுப்படுத்தும் நோக்கில் நவீன தொழில்நுட்பக் கருவி பொருத்தப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையின் தேசிய விமான சேவையான ஸ்ரீலங்கன் விமான சேவை, தற்போது கொழும்பில் இருந்து 21 நாடுகளைச் சேர்ந்த 26 நகரங்களுக்கு தனது சேவைகளை மேற்கொள்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## 24 மணித்தியாலங்களில் 533 பேர் கைது

நேற்று அதிகாலை 12.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் நாடு முழுவதும் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கைகளில் போதைப் பொருள் உள்ளிட்ட குற்றச் செயல்களுடன் தொடர்புடைய 533 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு இதனைத் தெரிவித்துள்ளது.

இந்த சந்தேகநபர்களிடம் இருந்து 273 கிராம் ஹெரோயின், 102 கிராம் ஐஸ், 1.778 கிலோ கிராம் கேரள கஞ்சா உள்ளிட்ட போதைப்பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# யேசு பிறந்த கிறிஸ்மஸைத் தனது இறப்பு தினம் என தற்கொலை செய்ய மட்டு வாவியில் குதித்தவர் மீட்பு

## நத்தார் கொண்டாட பணம் இல்லாததால் ஐந்து பிள்ளைகளின் தந்தை எடுத்த முடிவு

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பில் தொழில் இல்லாத காரணத்தால் நத்தாருக்கு பிள்ளைகள், மனைவிக்கு ஆடைவாங்கி கொடுக்க முடியாது மனமுடைந்த ஐந்து பிள்ளைகளின் தந்தை ஒருவர் "யேசுநாதரின் பிறந்த தினம் எனது இறப்புத்தினமான அமைய வேண்டும்" என்ற எண்ணத்துடன் தற்கொலை செய்வதற்காக மட்டக்களப்புக் கல்லடிப் பாலத்தில் இருந்து வாவியில் குதித்த நிலையில் காப்பாற்றப்பட்ட பரபரப்பு சம்பவம் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 11 மணிக்கு இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டு. தலைமையகப் பொலிஸ் பிரிவைச் சேர்ந்த கிறிஸ்வதரான 42 வயதுடைய 5 பிள்ளைகளின் தந்தை மேசன் தொழில் செய்துவந்துள்ள நிலையில் தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாக கட்டடத் தொழில் இல்லாத காரணத்தால் பொருளாதார ரீதியில் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வந்துள்ளார்.

இந்த நிலையில் வருடத்தில் ஒரு தடவை வரும் நத்தார் தினத்தை கொண்டாடுவதற்கு பிள்ளைகளுக்கு ஆடை வாங்கி கொடுக்க முடியாது நிலை மற்றும் மனைவியாரின் நச்சரிப்பு போன்றவற்றால் மனக்கவலையடைந்து இருந்துள்ளார்.

இதனையடுத்து ஞாயிறு இரவு வீட்டைவிட்டு வெளியேறி யேசுநாதரின் பிறந்த தினம் எனது இறப்பு தினமான அமைய வேண்டும் என தற்கொலைக்குப் பெயர் போன இடமான கல்லடிப் பாலத்தில் இருந்து தற்கொலை செய்ய வாவியில் குதித்திருக்கின்றார். வாவியில் இருந்த குதித்து நீரில் தத்தளித்த நிலையில் பயம் ஏற்பட்டதையடுத்து பாலத்தின் தூணைப் பிடித்துக் கொண்டு காப்பாற்றுமாறு கத்திய போது அங்கு தோணியில் மீன்பிடியில் ஈடுபட்டவர்கள் அவரைக் காப்பாற்றிக் கரை சேர்த்து, பொலிஸாருக்கு அறிவித்தனர்.

அந்த நபரை பொலிஸார் கைது செய்து தற்கொலை செய்ய முயற்சித்த குற்றச்சாட்டில் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதேவேளை இவரின் இந்த நடவடிக்கை பரபரப்பு அல்ல, நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியால் எதிர்காலத்தில் நாட்டு மக்கள் வாழ முடியாது இவ்வாறு தற்கொலைக்குச் செல்லவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர் என்பது இவரின் செயல் மூலம் அனைவருக்கும் உணர்த்தப்படுகின்றது என மக்கள் தமக்குள் பேசிக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# விடுமுறை காலத்தில் நுவரெலியாவில் குவியும் உல்லாசப் பயணிகள் கூட்டம்

(மஸ்கெலியா நிருபர் செ.தி.பெருமாள்)

நுவரெலியாவிற்கு வார இறுதியில் – சனி, ஞாயிற்றுக்கிழமைகளிலும் – ஏனைய விடுமுறை நாள்களிலும் வெளிமாவட்டங்களிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் பெருந்தொகையான சுற்றுலாப் பயணிகள் வருகை தருகின்றனர்.

குறிப்பாக அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளுக்கு தற்போது விடுமுறை வழங்கப்பட்டுள்ள நிலையிலும், நத்தார் பண்டிகை விடுமுறை மற்றும் புத்தாண்டு விடுமுறை என விடுமுறைக் காலம் தொடர்கிறது.

இதனால் பெரும் எண்ணிக்கையானவர்கள் நுவரெலியாவுக்கு விடுமுறையைக் கழிப்பதற்காக வருகின்றனர்.

இதன் காரணமாக நுவரெலியா விக்டோரியா பூங்காவிலும் கிரகரி பூங்காவிலும், கிரகரி வாவி கரையிலும், உலக முடிவு, சீதை அம்மன் கோவில், வரலாற்று சிறப்புமிக்க தபால் நிலையம் போன்ற பகுதிகளிலும் சுற்றுலாப் பயணிகள் கூட்டங் கூட்டமாகக் குவிந்துள்ளனர்.

அத்தோடு நுவரெலியா கிரகரி வாவி கரையில் அமைக்கப்பட்டுள்ள காணிவேல் களியாட்ட நிகழ்வுகளிலும், மட்டக்குதிரை சவாரி செய்யும் இடத்திலும் பெருந்தொகையான சுற்றுலா பயணிகள் குவிந்து காணப்படுகின்றனர்.

இவ்வாறு சுற்றுலா பயணிகள் விடுமுறை நாள்களில் நுவரெலியாவிற்கு வருகை தருவதால் வாகன தரிப்பிடங்களிலும் பிரதான வீதிகளிலும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகின்றது.

இந்த நாள்களில் நுவரெலியாவுக்கு சுற்றுலாப் பயணிகள் வருகை தருவதற்கு காலநிலை பொருத்தமானதாக உள்ளமையால் சுற்றுலா பயணிகள் மகிழ்ச்சியுடன் சுற்றுலா இடங்களை பார்த்து பொழுதுபோக்கி வருகின்றனர்.





# இரணைமடுக்குளத்தின் மேலதிக நீர் வெளியேற்றத்தால் எண்ணாயிரம் ஏக்கர் வரையிலான நெற்பயிர்கள் அழிவு

## ஏக்கருக்கு ஒன்றேமுக்கால் லட்சம் ரூபா நஷ்டம்

(பரந்தன் நிருபர்)

இரணைமடுக்குளத்தின் மேலதிக நீர் வெளியேற்றம் காரணமாக சுமார் எண்ணாயிரம் ஏக்கர் வரையான நெற்பயிர்கள் பகுதியளவிலும் முழுமையாகவும் அழிவடைந்துள்ளன. ஒவ்வெரு விவசாயிகளும் ஏக்கர் ஒன்றுக்கு சுமார் ஒரு லட்சத்து 76 ஆயிரத்து 300 ரூபா வரைவான இழப்பினை எதிர்கொண்டுள்ளனர்.

நாட்டில் நிலவி வரும் சீரற்ற காலநிலை காரணமாக இரணைமடுக் குளத்தின் வான் கதவுகள் மூலம் மேலதிக நீர் திறந்து விடப்பட்டு அதிக அளவான நீர் வெளியேற்றப்பட்டதனால் இரணைமடுக் குளத்தின் கீழ் உள்ள தாழ்நில பகுதிகளான பண்ணங்கண்டி, முரசுமோட்டை, ஐய்யன் கோவிலடி, பழைய வட்டகச்சி, கண்டாவளை போன்ற பகுதிகள் ஒரு வார காலத்துக்கு மேலாக வெள்ளத்தில் மூழ்கிக் காணப்பட்டன.

இப்பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள இவ்வாண்டுக்குரிய காலபோக நெற் செய்கையில் சுமார் எண்ணாயிரம் ஏக்கருக்கும் கூடுதலான நெல் வயல்கள் நீரில் மூழ்கியமையால் பகுதியளவிலும் முழுமையாகவும் அழிவடைந்துள்ளன.

இந்தப் பகுதிகளில் காலபோக நெற்செய்கை மேற்கொண்டுள்ள ஒவ்வொரு விவசாயிகளும் ஏக்கர் ஒன்றுக்கு சராசரியாக ஒரு லட்சத்து 76 ஆயிரத்து 300 ரூபாவுக்கும் மேற்பட்ட நட்டத்தை எதிர்கொண்டுள்ளனர்.

தற்போதைய பொருளாதார நெருக்கடியின் காரணமாக வங்கிகளில் கடன்களை பெற்றுக் கொண்டும், தங்களது நகைகளை அடகு வைத்தும், உரம் மற்றும்களைநாசினிகளைகடன்களாகப் பெற்றும், விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் இவ்வாறான நட்டத்தை எதிர்கொண்டிருப்பது என்பது அவர்களை மேலும் பாதிப்புக்குள்ளாக்கி உள்ளது.

இதற்கான இழப்பீடுகள் கிடைக்கப்பெற்றாலும் அது ஒரு முழுமையான இழப்பீடாகவோ அல்லது அரைவாசி செலவாகவோ கிடைக்கப்பெறும் என்பது கேள்விக்குறியாகும் என விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்து 2018 ஆம் ஆண்டிலும் இதுபோன்ற அளவிலே ஓர் அழிவை விவசாயிகள் எதிர்கொண்டிருந்தனர்.

வட மாகாணத்தின் பாரிய நீர்ப்பாசன குளமாக காணப்படும் இரணைமடுக் குளம் கடந்த 2017 ஆம் ஆண்டு புனரமைக்கப்பட்டாலும் அதன் முழுமையான பலாபலன்களையோ அல்லது சிறியளவு பலாபலன்களையோ தாம் அனுபவிக்கவில்லை என்றும் பாதிக்கப்பட்ட விவசாயிகள் தெரிவித்துள்ளார்.

சரியான பொறிமுறைகள் இன்றி குளத்தில் நீரைத் தேக்கி வைத்து, பொறுப்பற்ற விதத்தில் அதிக அளவில் திறந்து விடுவது என்பது அதிகாரிகளினது பொறுப்பற்ற செயல் எனப் பலரும் குற்றம் சாட்டியுள்ளனர்.





# சிவனொளிபாத மலை யாத்திரை காலத்துக்கான விதிமுறைகள் அடங்கிய வர்த்தமானி வெளியீடு

சிவனொளிபாத மலை யாத்திரை காலத்தின் போது பின்பற்றப்பட வேண்டிய விதிமுறைகளை உள்ளடக்கி, இரத்தினபுரி மாவட்ட செயலாளரினால் அதிவிசேட வர்த்தமானி வெளியிடப் படவுள்ளது.

இன்றைய பூரணைதினத்தில்ஆரம்பமாகவுள்ள சிவனொளிபாத மலை யாத்திரை, அடுத்த ஆண்டு மே 24ஆம் திகதி நிறைவு பெறவுள்ளது.

இந்த நிலையில், மேற்படி வர்த்தமானி அறிவித்தலுக்கமைய பெயர் குறிப்பிடப்பட்டுள்ள இடங்கள் மாத்திரமே தங்குமிடங்களாக பயன்படுத்தப்பட முடியும் எனவும் தற்காலிக தங்குமிடங்களை அமைக்கவோ அல்லது நடத்திச் செல்லவோ முடியாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தங்குமிடங்களில் யாசகம் பெறுவது அல்லது வழங்குவது தடை செய்யப்பட்டுள்ளது. பெயர் குறிப்பிடப்பட்ட பாதுகாப்பான இடங்களைத் தவிர ஏனைய இடங்களில் நீராடுவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

யாத்திரைக்கான மார்க்கத்தில் அல்லது தங்குமிடங்களில் பொலித்தீன் பொருள்களை பாதுகாப்பற்ற முறையில் வெளியேற்றக்கூடாது எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

யாத்திரீகர்கள் சிவனொளிபாத ஸ்தலத்தினுள் தங்குவதைத் தவிர்த்து, யாத்திரை நிறைவடைந்த உடன் வெளியேற வேண்டும் எனவும் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.



# அதிவேக நெடுஞ்சாலைகளில் அதிகூடிய அளவில் வருமானம்

அதிவேக நெடுஞ்சாலைகளில் இதுவரை வசூலிக்கப்படாத அளவு அதிகூடிய வருமானம் கடந்த 23 ஆம் திகதி கிடைத்துள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

அதற்கமைய, அன்றைய தினம் ஐந்து கோடி ரூபா வருமானம் ஈட்டப்பட்டுள்ளது. இது 40 வீத வருமான அதிகரிப்பு என சபை குறிப்பிட்டுள்ளது.

டிசம்பர் 22 ஆம் திகதி அதிவேக வீதிகளில் ஒரு லட்சத்து 40 ஆயிரத்து 791 வாகனங்கள் பயணித்துள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

# பெருந்தோட்ட நிறுவனங்களில் மறுசீரமைப்பு; அமைச்சரவை பத்திரம் ஜன. 1 இல் சமர்ப்பிப்பு



பெருந்தோட்ட நிறுவனங்களின் மறுசீரமைப்புக்கான முழு வேலைத் திட்டம் தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதி அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய அறிவித்துள்ளார்.

வட்டவளை பகுதியிலுள்ள பெருந் தோட்டமொன்றுக்கு கண்காணிப்பு விஜயமொன்றை மேற்கொண்டிருந்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த அமைச்சரவைப் பத்திரத்தில் மிகவும் வெளிப்படையான முறையில் ஏற்றுமதி விவசாய நடவடிக்கைகளுக்காக காணிகளை நீண்டகால குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கான யோசனைகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த விரும்பும் முதலீட்டாளர்களுக்குஅரசாங்கத்தின்கீழ்உள்ளபெருந்தோட்டங்களை நீண்டகால குத்தகைக்கு வழங்குவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.




# டிசெம்பரில் இதுவரை ஆயிரம் பேர் டெங்குடன் யாழ். ஆஸ்பத்திரியில்!

## இந்த மாதத்தில் மூவர் மரணம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், டிச.26

டிசம்பர் மாதத்தின் இதுவரையான நாள்களில் ஆயிரம் பேர் டெங்குக் காய்ச்சல் காரணமாக யாழ் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளமையோடு மூவர் உயிரிழந்துள்ளனர் எனப் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் ரி.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் மழையுடன் கூடிய கால நிலையின் காரணமாக நுளம்புப் பெருக்கம் காணப்படுகின்றது. அதன் காரணமாக டெங்கு காய்ச்சல் பரவலும் தீவிரம் பெற்று வரும் நிலையில் தற்போது தினமும் 50ற்கும் மேற்பட்ட டெங்கு நோயாளர்கள் வைத்திய சாலையில் அனுமதிக்கப்படுகின்றனர்.


டிசம்பர் மாதம் முதலாம் திகதி முதல் 25 ஆம் திகதி வரையில் ஆயிரம்பேர் பாதிக்கப்பட்டு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில் மூவர் உயிரிழந்துள்ளனர். இதேநேரம் கடந்த மாதமும் ஒரு மரணம் இடம் பெற்றது.

இம்மாதம் உயிரிழந்த மூவரில் இரு குழந்தையும் ஓர் யுவதியும் அடங்குகின்றனர். - என்றார்.



# கொவிட் வைரஸின் ஜே.என்.1 ரகத் திரிவினால் இலங்கைக்கு ஏற்படும் பாதிப்புகள் மிகக்குறைவு

## சுகாதார அமைச்சு அறிவிப்பு



கொவிட் - 19 வைரஸின் ஜே.என்.1 என்ற உப திரிவினால் இலங்கைக்கு ஏற்படும் பாதிப்புகள் மிகக்குறைவு எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில மாதங்களாக இலங்கையில் பதிவாகும் கொவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்து வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், கொவிட் - 19 வைரஸின் ஜே.என்.1 என்ற உப திரிவின் அபாயத்தை மதிப்பிடுவதற்கு மரபணு பரிசோதனைகளை மேற்கொள்ளுமாறு மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்திற்கு ஏற்கனவே அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும், அதன்படி அந்த நிறுவனம் ஏற்கனவே பரிசோதனைகளை மேற்கொண்டு வருவதாகவும் அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், இன்ப்ளூவன்ஸா மற்றும் பிற சுவாச நோய்களின் பரவலை முகமூடி அணிதல், சமூக இடைவெளியை பேணுதல் போன்றவற்றின் மூலம் குறைக்க முடியும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.



# சுனாமி ஏற்பட்டு 19 வருடங்கள்...!

## (2023.12.26 )

- எஸ்.அஷ்ரப்கான் -

இந்தோனேஷியா சுமத்ரா தீவில் ஏற்பட்ட கடலுக் கடியிலான நிலநடுக்கம் சுனாமி ஆழி பேரலையாக இலங்கை உட்பட பல நாடுகளையும் அதிரச் செய்த நிகழ்வு பல லட்சம் மனித உயிர்களை பறித்தும் பல்லாயிரம் கோடிகளுக்கு பொருளாதார பேரிழப்பை ஏற்படுத்தியும் நாம் கண்ணீர் சிந்தியதையும் மறந் திட முடியாது.

ஒரு சில நிமிடங்களில் ஆசியா கண்டத்தின் 10 நாடுகளில் அவற்றை ஒட்டியுள்ள தீவுகளில் மூன்று லட்சம் வரையான மக்கள் அழிந்தனர். ஆசியா தன் வரைபடத்தில் சில கிராமங்களை இழந்து விட்டிருந்தது. அவற்றில் பல மனிதர்களால் நிரந்தரமாக கைவிடப் பட்ட கிராமங்களாகவும் போய்விட்டன.

சுனாமி ஏற்பட்டு 19 வருடங்கள் கடந்திருக்கின் றன. ஆனால் அதன் வடுக்களிலல் இருந்து இன்னும் இலங்கையின் சில பகுதிகள் மீளாத நிலையில் உள்ளன. இங்கு கவனிக்கத்தக்க விடயம் யாதெனில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த பிரதேசங்களை மிக விசேட கவனம் செலுத்தி மீள் கட்டுமான வேலை கள் அதி தீவிரமாக கடந்த 2005, 2006 காலப் பகுதியில் நடந்தேறி முடிந்துள்ளன.

ஆனால் எமது சில பிரதேசங்கள் கவனிப்பாரற் றுக் கிடக்கின்றன. இன்னும் அக்கரைப்பற்றிலும் அதனை அண்டிய பிரதேசங்களிலும் சுனாமியால் பாதிக்கப்பட்ட முஸ்லிம்களுக்கென்று சவூதி அரேபிய அரசினால் கட்டப்பட்ட வீட்டுத் திட்டம் இன்னும் உரிய வர்களுக்கு வழங்கப்படவில்லை. இது கானல் நீரான கதையாகிப் போயுள்ளது. தற்போது இந்த வீடுகள் விஷ ஜந்துக்களும் மிருகங்களுக்குமான குடியி ருப்பாக மாறியிருக்கின்றது. அது மாத்திரமல்லாமல் பல்வேறு குற்றச் செயல்களும் அங்கு இடம்பெற்று வருகின்றது. இந்த விடயத்தில் ஒட்டுமொத்த முஸ்லிம் அரசியல்வாதிகளும் படுதோல்வி அடைந்துள்ள னர். பேரினவாத சக்திகளின் விடாப்பிடியான துவேச நிலைமைகள் அரசியல்வாதிகளின் பொடுபோக்கு என்பன இதற்குக் காரணங்களாகும்.

இவ்வாறான ஒரு இயற்கையின் சீற்றம் ஏற்படும் போது மக்களே விழிப்பாகவும் சிறப்பாகவும் தங்களைத் தயார் நிலையில் வைத்துக் கொள்ள வேண்டும் என்பதை கடந்த சுனாமி பேரழிவு எமக்கு பாடம் சொல்லிக் கொண்டிருக்கிறது.

சுமத்ரா தீவுப் பகுதியில் ஏற்பட்ட பூகம்பம் 8.9 ரிக் டர் அளவு பதிவாகியிருந்தது. கடற்பரப்பில் ஏற்பட்ட இதேவேகமுள்ள நிலநடுக்கம் தரைப் பகுதியில் ஏற்பட்டிருந்தால் ஆசியாவின் பல நாடுகள் தரை மட்டமாகியிருக்கும். இதன் பாதிப்புப் பல ஆயிரம் அணுகுண்டுகள் வெடித்ததற்குச் சமமாக இருக்கும் என்று புவியமைப்பியல் வல்லுநர்கள் அப்போது தெரிவித்திருந்தனர்.

அதுபோல் அண்மையிலும் பசிபிக் பெருங்கடலில் ஆஸ்திரேலியாவுக்கு அருகே உள்ள தீவு நாடான பப்புவா நியூகினியாவின் தரோன் நகரில் மிகப் பயங்கரமான நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டரில் 8 ஆகப் பதிவாகி இருந்தது. இதையடுத்து பப்புவா நியூகினியாவின் கிழக்குப் பகுதியைச் சுனாமிப் பேரலைகள் தாக்கும் என எச்சரிக்கையும் விடுக்கப் பட்டிருந்தது. அதுபோல் உலகின் பல்வேறு நாடுக ளிலும் அடிக்கடி இந்த நில நடுக்கம் ஏற்படுவதும் சுனாமி எச்சரிக்கை விடுக்கப்படுவதும் தற்போதும் நிகழ்ந்தவண்ணமே உள்ளது.

### இயற்கை அழிவுக்கு முகம் கொடுத்தல்

சுனாமி போன்ற தாக்கங்களை நாம் எதிர் கொண்ட போது உலகத்தின் மீதுள்ள பற்றுக் காரண மாக கொஞ்சம் கொஞ்சமாக ஆயுள் முழுவதையும் செலவு செய்து சேகரித்து கொண்ட பொருள்கள் சில நொடிகளில் அழிந்து போனது. அதேபோன்று மரணத் திலிருந்தும் எம்மால் தப்ப முடியாது என்பது எமக்கு முன்னுள்ள படிப்பினையாகும்.

உலகில் சுனாமி, பூகம்பம், புயல், மழை, வெள்ளம், எரிமலை வெடிப்புக்கள் எனப் பல நடந்து கொண் டேயிருக்கின்றன. கடந்த 100 வருடங்களில் மனித இனத்தை பாதித்த சம்பவங்களாக 1923 ஆம் ஆண்டு ஜப்பானில் ஏற்பட்ட பூகம்பத்தில் ஒரு லட்சத்து நாற் பதாயிரம் பேர் இறந்தனர், 1935 இல் இந்தியா வின் குவெட்டாவில் 50,000 பேரும், 1939 இல் சிலியில் 28,000 பேரும், அதே ஆண்டு துருக்கி

தொடர்ச்சி ▼

# சுனாமி ஏற்பட்டு 19 வருடங்கள்...!

தொடர்ச்சி ▲

யில் 33,000 பேரும், 1960 இல் மொரோக்கா வில் 12,000 பேரும், 1976 இல் சீனாவில் இரண்டு லட்சத்து நாற்பதாயிரம் பேரும், அதே ஆண்டு கவுத மாலாவில் 23,000 பேரும், 1978 இல் ஈரானில் 25,000 பேரும், 1985 இல் மெக்ஸிகோவில் 9,500 பேரும், 1988 இல் ஆர்மீனியாவில் 25,000 பேரும், 1990 இல் ஈரானில் 50,000 பேரும், 1993 இல் இந்தியாவின் லட்டூரில் 10,000 பேரும், 1995 இல் ஜப்பானில் 6,000 பேரும், 1998 இல் ஆப்கானிஸ் தான் மற்றும் தாஜிஸ்தானில் 5,000 பேரும், 1999 இல் துருக்கில் 17,000 பேரும், 2001 இல் குஜராத் தில் 13,000 பேரும், 2003 இல் ஈரானில் 41,000 பேரும் பூகம்பத்தால் கொல்லப்பட்டுள்ளனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. இவை பேரழிவு ஏற்படுத் திய பூகம்பங்களின் பட்டியல்.

இவை தவிர சில ஆயிரக் கணக்கில் பலி கொண்ட பூகம்பங்களும் உண்டு. இவை மனித இனத்தைப் பெரிதும் பாதித்தாலும் மிருக இனங்கள் தப்பிக்கொள் வதாக ஆய்வுகள் சுட்டிகாட்டுகின்றது. இவை அனைத் தும் மனிதனைத் துய்மைப்படுத்தவும், சிந்திக்கவும் வைத்தன.

அனர்த்தங்கள் சம்பவிக்கும் வேளைகளில் அவற் றுக்கு ஆயத்தமாகும் முகமாக அனர்த்த முன்னாயத்த திட்டங்கள், அறிவூட்டல், அனர்த்த அறிவிப்பு, ஒலி யெழுப்பல், சகல மட்டங்களிலும் விருத்தியாக் கப்பட்டிருக்கின்றன.

இலங்கை அனர்த்த முகாமைத்துவ சட்டம் மற்றும் தேசிய அனர்த்த முகாமைத்துவ கொள்கை ஆகிய வற்றிலும் இந்த விடயங்கள் தெளிவாக குறிப்பிடப் பட்டுள்ளன.

அனர்த்த முகாமைத்துவம் பல்வேறு செயற்பாட் டாளர்களைக் கருத்தில் கொண்டு கட்டளை இடுதல் கட்டுப்படுத்தப்படுத்தல்களை விட ஒருங்கிணைப்பை வலியுறுத்தும் விதத்தில் நிறுவக மாதிரிகள் கட்டமைக் கப்பட்டுள்ளன.

எவ்வாறாயினும் கட்டளை இடுதலும், கட்டுப்படுப் படுத்தலும் ஒவ்வோரு அரச நிறுவன அதிகாரிகளுக் கிடையிலேயே பொருந்தக்கூடும். ஒப்படைக்கப்பட்ட பணி, பொறுப்புக்கள் மற்றும் ஆற்றல் வாய்ந்த முகவர்களுக்கிடையேயான ஒருங்கிணைப்புமே முக்கிய அம்சங்களாகும். அனர்த்த முகாமைத்துவ மற்றும் மனித உரிமைகள் அமைச்சு, அனர்த்த முகா மைத்துவ நிலையம் ஒட்டுமொத்த அதிகாரத்தைக் கொண்டு இருக்கையில் மாகாண அனர்த்த முகா மைத்துவ ஒருங்கிணைப்பு பிரிவு, மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்புப் பிரிவு, மாகாண, மாவட்ட, உள்ளூராட்சி, பிரதேச, கிராம சேவையா ளர் மட்டங்களில் பதிலிறுப்பு, மீளுமை பிரயத்த னங்கள், முகாமைத்துவம், அவசர தகவல்களைப் பரப்பல் போன்றவற்றுக்கான ஒருங்கிணைப்புப் பிரிவாக செயற்படுகிறது. இது நிர்வாகக் கட்டமைப்பு விடயங்களாகும்.

## சுனாமி வரலாறு

கி.மு. 426 கிரேக்க வரலாற்றாசிரியர் தியுசிடைட்ஸ், சுனாமி ஏற்படுவதற்கான காரணங்களை 'பிலோப் போனேசியப் போர் வரலாறு' என்ற புத்தகத்தில் கூறியுள்ளார். அவர் தான் முதன் முதலில் கடலில் நிலநடுக்கம் ஏற்பட்டது என்றும், எந்த இடத்தில் நில நடுக்கம் கடலில் உண்டானதோ அங்கு கடல் உள்வாங்கும். பின்பு திடீர் என்று பின்வாங்குதலும், மறு இரட்டை சக்தியும் கொண்ட வெள்ளப் பெருக்கு ஏற்படுகிறது. நிலநடுக்கம் ஏற்படாமல் இப்படி ஒரு விபத்து ஏற்பட வாய்ப்பே இல்லை என அவர் குறிப் பிட்டுள்ளார்.

கி.பி. 365 இல் அலெக்சாந்திரியாவில் மிகப் பெரிய அழிவுக்குப்பின் ரோமன் வரலாற்றாசிரியர் அம்மியனஸ் மாசில்லினுஸ் சுனாமி என்பது, நில நடுக்கத்தில் தொடங்கி கடல் நீர் பின்னடைவு, அதைத் தொடர்ந்து இராட்சத அலை என்ற தொடர்ச்சியான நிகழ்வாக அமைகிறது என்றார். அதாவது, நில நடுக்கம் என்பது நிலப்பகுதியில் கடல் பகுதியில், மலைப்பகுதியில் ஏற்படும். நிலப்பகுதியில் வந்தால் நிலத்தில் உள்ளவை அதிர்ந்து சேதமாகிறது. கடலில் வந்தால் கடலின் ஆழமான பகுதியிலுள்ள நிலத் தட்டுக்களின் அசைவு பெரிய அலைகளை உருவாக்கு கின்றது. மலையில் எரிமலையாக உருவெடுகிறது. பல இலட்சம் ஆண்டுகளுக்கு முன்பு ஒரே நிலத்தட் டுத்தான் இருந்தது. அதன் மீது தான் பூமி இருந்தது. ஆனால் கண்டங்களாகப் பிரியப் பிரிய அதன் தட்டு வெப்ப இயற்கை சூழ்நிலைகளுக்கு ஏற்ப, பல்வேறு நிலத்தட்டுக்கள் உருவாகின. இந்தத் தட்டுக்களின் மீதுதான் ஒவ்வொரு கண்டமும் இருக்கின்றன. நிலம், கடல் எல்லாவற்றையும் தாங்கி நிற்பது இந்த நிலத் தட்டுக்கள் தான். இதைத் தான் 'டெக்டானிக் பிளேட்கள்' என்று புவியியல் நிபுணர்கள் கூறுகின்றனர்.

ஏப்ரல் 1946, அலாஸ்காவில் அலேடன் தீவுகளுக்கு அருகில் 7.8 ரிக்டர் அளவுகள் பூகம்பம் ஏற்பட்டது. இதனால் 14 மீட்டர் உயரத்திற்கு அலை மேலே எழுந்து ஹவாய் தீவில் உள்ள ஹிலோ என்ற இடத்தையே அழித்துவிட்டது. பசிபிக்பெருங்கடல்தரையில்அலாஸ்கா கீழ் நோக்கித் தள்ளப்பட்டதால், உண்டான பூகம்பமே இதற்குக் காரணம். குறுகும் எல்லைகளில் இருந்தும் ஸ்டாரிக்கா என்ற இடத்தில் 8,000 வருடங்களுக்கு முன் சுனாமி தோன்றியது. கிராண்ட் பேங்க் 1929, பப்புவா நியு கினியா 1998 (டப்பின் 2001) சுனா மிகள் ஏற்படக் காரணம் பூகம்பத்தின் மூலம் உண்டான வண்டல் கடலில் சென்று கலந்ததால் உண்டானது. ஸ்டாரிக்கா வண்டல் தோல்விக்குச் சரியான காரணம் தெரியவில்லை.

அதிகப்படியான வண்டல்கள், ஒரு நிலநடுக்கம் அல்லது எரிவாயு ஹைட்ரேட் வெளியானது (மீத்தேன் போன்ற வாயுக்கள்) காரணமாகவும் ஏற்பட்டிருக்கல-ாம். 1960 வால்டிவியா பூகம்பம் (9.5 ஆறு), 1964 அலாஸ்கா பூகம்பம் (9.2 ஆறு), 2004ல் இந்தியப் பெருங்கடல் நிலநடுக்கம் மற்றும் 2011ல் தோஹு பூகம்பம் (9.0 ஆறு) போன்றவை சமீபத்தில் ஏற்பட்டு அருகிலுள்ள கரையோரப் பகுதிகளை ஒரு சில நிமிடங்களில் பாழ்படுத்தியது.

## நிலச்சரிவுகளால் உருவாக்கப்பட்டது

1950களில் பெரும் நிலச்சரிவுகள் மூலம் தான் பெரிய சுனாமிகள் உண்டானது என்று நம்பப்பட்டது. நீருக்கடியில் ஏற்படும் நிலச்சரிவுகளால் ஏற்படும் சுனா மியை 'சியோருக்கஸ்' என்று அழைத்தனர். இதனால் அதிக அளவு நீர் இடப்பெயர்ச்சி செய்யப்படுகிறது ஏனெனில் நிலச்சரிவினால் உண்டாகும் கழிவுகள் அல்லது விரிவாக்கத்தால் உண்டாகும் சக்தி திரும்ப வும் நீருக்குள்ளேயே செலுத்தப்படுகிறது. 1958 இல் மிகப்பெரிய நிலச்சரிவு, அலாஸ்காவின் லிடுயா விரிகுடா பகுதியில் ஏற்பட்டபோது 524 மீற்றர் உயரத் துக்கு (1700 அடிக்குமேல்) அலை ஏற்பட்டது.

சுனாமி பேரலை தாக்கி 19 வருடங்கள் கழியும் நிலையில் சுனாமி மற்றும் இயற்கை அனர்த்தங்கள் பற்றிய அறிவைப் பெற்றுக் கொள்வதே மனிதர்கள் அதிலிருந்து ஓரளவு தம்மை தற்காத்துக் கொள்ள சிறந்த வழி ஒன்றாகும். வெறுமனே நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்தி ஒவ்வொரு வருடமும் இழந்த உயிர்கள், உடமைகளை நினைத்து அழுது புலம்பி கட்டிப் புரள்வதில் எவ்வித பயனும் மக்களுக்கு ஏற்பட்டு விடப்போவதில்லை.

# இன்றைய ராசி பலன்கள் - 26.12.2023


மேஷம்

மற்றவர்களுடன் பழகும்பொழுது எப்படி பழகுகிறீர்கள் என்று கவனத்தில் கொண்டு பழகுங்கள்.பலன்கள் தாமாத மாகக் கிடைக்கும்.பொறுமையுடன் இருந் தால் இலக்குகளை அடைவதில் வெற்றி பெறலாம்.

பணியைப் பொறுத்தவரை அதிக முயற்சி தேவை.இன்று பணியில்தவறுகள் நேர வாய்ப்பு உள்ளது.

உங்கள் உணர்வுகளை நகைச்சுவையுடன் பகிர்ந்து கொள்வதன் மூலம் காதலில் வெற்றி பெறலாம்.இதனால் மோதல்களைக் குறைக்கலாம்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இல்லை.இன்று பணத தட்டுப்பாடு காணப்படும்.அதிக பணம் சம்பாதிக்கும் திறமை குறைந்து காணப்படும்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது.தொண்டை சம்பந்த மான எரிச்சல் காணப்படும்.


ரிஷபம்

இன்று பயணங்கள் ஏற்படலாம். இன்று பிறருடன் தொடர்பு கொள்வதில் குறைபாடு காணப்படும்.உணர்ச்சி வசப்படக்கூடிய வாய்ப்பு உள்ளது.

இன்று பணியிடச் சூழல் சிறப்பாக காணப்படாது.சக பணியாளர்களிடம் சுமுகமான உறவு நிலை காணப்படாது.

உங்கள் பிரியமானவருடனான உறவில் நல்லிணக்கம் காணப்படாது.உணர்ச்சி வசப்படாமல் இருப்பதற்கு முயற்சி செய்து காதலை மகிழ்ச்சியாக்குங்கள்.

இன்று உங்கள் குடும்பத்திற்காக தேவையற்ற செலவுகள் செய்ய் நேரலாம்.வீண் செலவுகள் ஏற்பட லாம்.

பதட்டம் காரணமாக கால்களில் வலி காணப்படும். ஆரோக்கியத்தை நல்ல நிலையில் வைத்திருக்க தியா னம் அல்லது யோகா மேற்கொள்வது நல்லது.


மிதுனம்

இன்று பொறுப்புகள் அதிகமாகக் காணப்படும்.சௌகரியங்கள் குறைந்து காணப்படும். பொறுமையுடன் கையாண் டால் எதையும் எளிதாக முடிக்கலாம்.

இன்று பணியிடச் சூழல் கடினமாக இருக்கும்.குறைந்த நேரத்தில் பணிகளை விரைந்து முடிப்பது கடினமாக இருக்கும்.

உங்கள் பிரியமானவருடன் மோதல்கள் காணப்படும். நீங்கள் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று பணம் குறைந்து காணப்படும்.அதனால் உங்கள்அடிப்படைதேவைகளை பூர்த்தி செய்ய சிறிய அளவில் கடன் வாங்க நேரலாம்.இன்று சிறப்பான நாளாக அமையாது.

இன்று ஆரோக்கியம் சிறப்புடன் காணப்படாது. அசௌகரியங்கள் மற்றும் செலவுகள் காணப்படும்


கடகம்

இன்று உங்கள்செயல்களை நன்கு ஆற்றுவீர்கள்.நல்ல வளர்ச்சி காணப்படும். உங்கள்விருப்பங்கள் நிறைவேறுவதற்கு உகந்த நாள்.

இன்று பணிகளை சுமுகமாக செய்து முடிப்பீர்கள்.உங்கள் விருப்பங்கள் நிறை வேறுவதற்கான நல்ல வாய்ப்புகளும்இன்று கிடைக் கும்.

உங்கள் பிரியமானவருடன் நல்லுறவு காணப்படும். உங்கள் துணையிடம் அன்பான வார்த்தைகளை பரி மாறிக்கொள்வீர்கள்.

உங்களிடம் காணப்படும் பணம் உங்களுக்கு சௌ கரியமாக இருக்கும்.நீங்கள் நிதிவிஷயத்தில் சுதந்திர மாக விரும்பியதை செய்ய இயலும்.

ஆரோக்கியம் சிறப்புடன் காணப்படும். உங்கள்தேக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.


சிம்மம்

நீங்கள்இன்று பயணங்கள் மேற் கொள்ள வேண்டியிருக்கும்.மேலும் முக்கியமான பணிகளை ஆற்ற வேண்டி யிருக்கும்.எந்தச் செயலையும் ஒரு முறைக்கு இருமுறை ஆராய்ந்து செய்ய வேண்டும்.

இன்று பணியிடச் சூழல் சுமுகமாக இருக்காது. பணிச்சுமை அதிகமாக இருக்கும்.இது உங்களுக்கு சிறிது பதட்டத்தை உருவாக்கும்.

உங்கள் பிரியமானவருடன் கருத்து வேறுபாடு எழும். ஒற்றுமையை தக்க வைக்க நீங்கள் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

ஆன்மீக பயணம் காரணமாக பணத்தை செலவு செய்வீர்கள்.பணஇழப்பிற்கான வாய்ப்பு இருப்பதால் பணத்தை கவனமாக கையாள வேண்டும்.

உங்கள் தந்தையாருக்கு சுவாசப் பிரச்சினை காணப்படும்.


கன்னி

இன்று வெற்றி பெறுவதற்கு அதிக முயற்சிகள்செய்ய வேண்டியிருக்கும். இன்று அதிக சவால்களை சந்திக்க வேண்டியிருக்கும்.என்றாலும் உங்கள் சமயோசித புத்தியினால் உங்கள் செயல்களை நன்கு ஆற்றுவீர்கள்.

இன்று புதிய பொறுப்புகளை ஏற்பீர்கள். அது உங்க ளுக்கு புதிய சவாலாக இருக்கும்.இந்தச் சவாலை நீங்கள் எளிதில் சமாளிப்பீர்கள்.

உங்கள் பிரியமானவருடன் கருத்து வேறுபாடு காணப்படும்.விஷயங்களை இலேசாக எடுத்துக் கொண்டு உறவினை நல்லுறவாக ஆக்க வேண்டும்.

இன்ற வரவு செலவு இரண்டும் கலந்து காணப்படும். பணம் சேமிப்பதற்கு குறைந்த வாய்ப்புகளே உள்ளன.

நீங்கள் சிறிது பதட்டமாக காணப்படுவீர்கள். செரி மானக் கோளாறுகள் காணப்படும்.


துலாம்

இன்று சற்று மந்தமான நாளாக இருக்கும்.உங்களது சூழ்நிலையைக் கண்டு உணரச்சிவசப்படாதீர்கள். இன்று முக்கியமான முடிவுகள் எடுப்பதற்கு உகந்த நாள் அல்ல.

பணிகள் திறம்பட செயலாற்ற இயலாது.உங்கள் தேவைகளை பூர்த்தி செய்யும் வகை யில் நீங்கள் வேறு வேலையைத் தேடுவீர்கள்.

உங்கள் பிரியமானவருடன் இன்று விவாதத்தில் ஈடுபட நேரலாம்.நிலைமை மோசமாகாமல் தடுக்க அதனை தவிர்ப்பது நல்லது.

நிதிவளர்ச்சி இன்று அவ்வளவு சிறப்பாக இருக்காது. தேவையற்ற கூடுதலான செலவினங்களை சந்திக்க நேரலாம்.

உங்கள் குடும்ப அங்கத்தினர்களின் மருத்துவ செலவிற் காக நீங்கள் செலவு செய்ய நேரும்.


விருச்சிகம்

இன்று நீங்கள் மேற்கொள்ளும் செயல்கள் அனைத்திலும் வெற்றி கிடைக் கும்.புதிய நபர்கள் மற்றும் நண்பர்களின் தொடர்பு கிடைக்கும்.இன்று முழுவதும் உற்சாகத்துடன் காணப்படுவீர்கள்.

உங்கள் பணியில் இன்று திருப்தி கரமான நிலை காண்பீர்கள். உங்கள் பணி உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

நீங்கள்இன்று காற்றில் பறப்பது போல உணர்வீர் கள்.காதல் உணர்வுகளை உங்கள் பிரியமானவரிடம் வெளிப்படுத்துவீர்கள்.

இன்று நிதிநிலைமை சீராக இருக்கும்.உங்களால் பணம் சேமிக்க இயலும்.

இன்று உங்கள்ஆரோக்கியம் சிறப்புடன் காணப்படும். உங்களிடம் காணப்படும் தைரியம் மற்றும் ஆற்றல் உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்க உதவும்.

# இன்றைய ராசி பலன்கள் - 26.12.2023




இன்று முழுவதும் வேலையில் மும்முரமாக இருப்பீர்கள்.நல்ல முடிவுகளை எடுக்க இந்த நாளை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம்.இன்று நீங்கள் விரைந்து செயலாற்றுவீர்கள்.

பணிநிமித்தமான பயணங்கள் ஏற்படும். நீங்கள் கூடுதலான பணிகளை ஆற்ற கடமைப்படுவீர்கள்.

இன்று திருமணம் பற்றிய முடிவு எடுப்பதை வேறு ஒரு நாளைக்கு தள்ளி வைக்கவும்.இன்று உங்கள் பிரியமானவருடன் பேசுவதற்கு உகந்த நாள் கிடையாது.

இன்று செலவுகள் அதிகமாக காணப்படும். உங்களிடம் உள்ள பணத்தைக் கொண்டு அதை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

குழந்தைகளின் ஆரோக்கியம் பற்றிய கவலை இருக்கும்.




இன்று மந்தமான நாள். உங்கள் செயல்களில் நீங்கள் கவனமாக இருக்க வேண்டும்.உங்கள் கவலைகள் அதிகரிக்காமல் இருக்க தேவையற்ற எண்ணங்களை கைவிடுங்கள்.

இன்று பணியிடச்சூழல் சாதகமாக இருக்காது.பணியில் அதிக தவறுகள் ஏற்படும்.அது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.எச்சரிக்கையுடன் நடந்து கொள்வது நல்லது.

உங்கள் துணையிடம் பொறுமை இழப்பீர்கள். கேள்விப்படும் வதந்திகள் உங்கள் துணையுடனான உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.உரையாடும் போது கவனத்துடன் இருக்க வேண்டும்.

இன்று பணவளர்ச்சி சிறப்பாக இருக்காது.பணம் கையாள்வதில் சில சிக்கல்களை நீங்கள் உணர்வீர்கள்.

இன்று ஆரோக்கியம்சிறப்பாக இருக்காது.




இன்று முக்கியமான முடிவுகளை எடுப்பதற்கு உகந்த நாள் அல்ல. புத்திசாலித்தனமாக செயலாற்றுவதன் மூலம் இன்றைய நாளை நீங்கள் உங்களுக்கு சாதகமாக்கிக் கொள்ளலாம்.

பணிசார்நத பயணங்கள் இன்று சாத்தியம்.உங்கள் சகபணியாளர்களிடம் நல்ல உறவு முறை பராமரிப்பது அவசியம். உங்கள் பணிகளை முறையாக திட்டமிடுவது முக்கியம்.

உங்கள் பிரியமானவருடன் உங்கள் உறவை பராமரிக்க விரும்பினாலும் சில சமயங்களில் நீங்கள் மனநிலையை இழப்பீர்கள்.

இன்று பணவிஷயத்தில் உணர்ச்சிவசப்பட்டு எந்த முடிவையும் எடுக்காதீர்கள்.நிதி சம்பந்தமான முடிவுகளை அடுத்த நாளிற்கு தள்ளிப் போடுங்கள்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது.




இன்று பலன் தரும் முக்கியமான முடிவுகளை எடுப்பீர்கள். இன்று உறுதியும் தைரியமும் உங்களிடம் காணப்படும்.

சகபணியாளர்களிடம் நட்புமுறையில் பழகுவீர்கள்.பணியில் நல்ல பெயர் எடுப்பீர்கள்.

உங்கள் துணையுடனான பேச்சிலும் செயலிலும் இனிமை காணப்படும். இது உங்கள் உறவுப் பிணைப்பை வலுவாக்கும்.

இன்று நிதிநிலைமை சாதகமாக இருக்கும்.இன்று பணத்தை சேமிக்கவும் இயலும்.

இன்று உங்கள்ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

இன்று அனைத்தும் உங்களுக்கு சிறப்பாக காணப்படுவதால் நீங்கள்ஆரோக்கியமாக இருப்பீர்கள்.




Discover the Ultimate Investment &
Dynamic Destinations
which Redefines the Face of Luxurious Living

OUR ONGOING PROJECTS
No.06, 19th Lane, Colombo 03.
No. 15A, Layards Rd, Colombo 04.
No.30, Hotel Road, Mount Lavinia.
No. 02, Glenfall Road, Nuwara Eliya.
No.01, Havelock Place, Colombo 05.
No. 34/2, De Saram Road, Mount Lavinia.
No. 358, High Level Road, Nugegoda.
No. 35, Ramakrishna Road, Colombo 06.



Blue Ocean GROUP OF COMPANIES
KELSEY HOMES 40 Years Housing Excellence
+94 777 546 546 | +94 770 774 774
LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA
No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka.

Northern PC Park
வடக்கின் கணினிப்பூங்கா



கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park

# யாழ் மாநகர சபை செயற்பாடுகளுடன் முரண்படுகின்றது யாழ் வணிகர் கழகம்




யாழ்.நகர் பகுதியில், யாழ் மாநகர சபையினால் வாகனத் தரிப்பிடக் கட்டணம் வசூலிக்கப்படுவதால், தமது வியாபர நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன என யாழ்.வணிகர் கழகம் கவலை தெரிவித்துள்ளது.

அதேவேளை யாழ்.மாநகர சபையின் கட்டண வசூலிப்பால் தாம் சிரமங்களை எதிர்கொள்வதுடன், பாதிப்புகளைய எதிர்கொள்கின்றனர் எனபொது மக்கள் நீண்ட காலமாக விசனம் தெரிவித்தும் வருகின்றனர்.

யாழ்.நகர் பகுதியில் குறிப்பாக வைத்தியசாலை வீதி, மின்சார நிலைய வீதி மற்றும் கஸ்தூரியார் வீதிகளில் சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்கள் நிறுத்துபவர்களிடம் தரிப்பிடக் கட்டணம் அறவிடப்படுகிறது.

அது, வாகனங்களுக்கான பாதுகாப்புக் கட்டணம் அல்ல, வாகனத்தை நிறுத்துவதற்கான தரிப்பிட கட்டணம் எனக் கூறியே அறவிடப்படுகிறது. அதவாது வாகனம் காணாமல் போனாலோ, வாகனப் பாகங்கள் காணாமல் போனாலோ அதற்கு அவர்கள் (கட்டணம் அறவிடுவோர்) பொறுப்பாளிகள் அல்லர்.

சைக்கிள்களுக்கு 20 ரூபாவும், மோட்டார் சைக்கிள்களுக்கு 30 ரூபாவும் அறவிடப்பட்டு வருகின்றன. அவ்வாறு அறவிடப்படும் போது மிகுதி பணம் இல்லை என மிகுதியை கொடுக்காத சந்தர்ப்பங்களும் உண்டு.

அத்துடன் கட்டணம் அறவிடும் நபர்கள் மாநகர சபையினால் குத்தகைக்கு வழங்கப்பட்டு, அதனை எடுத்துக்கொண்ட மூன்றாம் நபர்களே. அவர்கள் உரிய முறையில் ஒழுக்கமாக நடந்து கொள்பவர்கள் இல்லை எனும் விசனமும் உண்டு.

இவ்வாறு கட்டணம் அறவிடப்படுவதனால், வைத்தியசாலையில் தங்கி இருந்து சிகிச்சை பெறும் நோயாளிகளுக்கு உணவு வழங்க, மோட்டார் சைக்கிளில் வருவோர், மூன்று வேளையும் தலா 30 ரூபா வீதம் நாளொன்றுக்கு 90 ரூபா கட்டணம் செலுத்துகின்றனர்.

அதேபோல கடைகளில் பொருட்களைக் கொள்வனவு செய்யச் செல்வோரும் மோட்டார் சைக்கிளை நிறுத்தியவுடன் கட்டணம் வசூலிப்பவர் பணத்தினை வசூலித்து சென்று விடுகிறார். இது தொடர்பில் மக்கள் கடும் விசனம் தெரிவித்து வந்தனர்.

இந்நிலையில், தற்போது இந்தக் கட்டண வசூலிப்பால், தமது கடைகளுக்கு வரும் மக்கள் குறைந்துள்ளனர் என யாழ்.வணிகர் கழகம் கவலை தெரிவித்துள்ளது.

தமது கடைகளில் சிறு பொருள்களை வாங்க வருவோரிடமும், தரிப்பிடக் கட்டணம் வசூலிப்பதால் பொருள்களை வாங்க வருவோர் தமது கடைகளை தவிர்த்து கொள்கின்றனர் என்கின்றனர் வணிகர் கழகத்தினர்.

ஏற்கனவே பொருளாதார நெருக்கடிகளினால் பொருள்களின் விலை அதிகரித்து, வியாபாரங்கள் பெரிதளவில் நடக்காத நிலையில், கடைகளுக்கு வரும் வாடிக்கையார்களிடம் தரிப்பிடக் கட்டணம் அறவிடுவதால் வாடிக்கையாளர்கள் கடைகளுக்கு வருவதைத் தவிர்த்து கொள்கின்றனர், எனவே வாகனத் தரிப்பிடக் கட்டணத்தை வசூலிப்பதை நிறுத்துமாறு யாழ். மாநகர சபையிடம் கோரியுள்ளோம். அவர்கள் இதுவரையில் அது தொடர்பில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை எனக் கவலை தெரிவித்தனர் வணிகர் கழகத்தினர்.

“வடமாகாணத்தில் உள்ள உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கு சந்தை வாய்ப்புகளை ஏற்படுத்தி கொடுக்கும் முகமாக கண்காட்சி ஒன்றினை ஏற்பாடு செய்துள்ளோம். அதற்காக நாம் 140 கூடங்களை அமைத்து அவர்களுக்கு இலவசமாக கொடுத்துள்ளோம். அவ்வாறு கொடுக்கப்பட்ட கூடம் ஒன்றுக்கு ஆயிரம் ரூபா மாநகர சபைக்கு வரி கட்ட வேண்டும் என எமக்குக் கடிதம் அனுப்பியுள்ளனர். இதற்கு நாம் எதிர்ப்பைத் தெரிவித்து மாநகர சபைக்கு கடிதம் அனுப்பியுள்ளமையுடன், வடமாகாண ஆளுநருக்கும் கடிதம் அனுப்பியுள்ளோம்” - என யாழ். வணிகர் கழகம் தெரிவித்துள்ளது.

# 4 வலம்புரிச் சங்குகளுடன் மன்னாரில் ஒருவர் கைது!

**(மன்னார் நிருபர்)**

மன்னார் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சாந்திபுரம் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் வைத்து பல லட்சம் ரூபாய் பெறுமதியான நான்கு வலம்புரி சங்குகளுடன் நபர் ஒருவர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு மன்னார் பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.





கைது செய்யப்பட்டவர் சாந்திபுரம் கிராமத்தைச் சேர்ந்த 59 வயதுடைய நபர் எனவும் அவர் அந்த நான்கு வலம்புரிச் சங்குகளையும் விற்பனை செய்யும் நோக்கில் வைத்திருந்த நிலையில் கைது செய்யப்பட்டுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேக நபர் மேற்படி நான்கு வலம்புரி சங்குகளுடன் மன்னார் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். மன்னார் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.